உ

சிவமயம்,

புலிப்பாணிமகாமுனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

சோதிடம் முந்நூறு.

இஃது

திரிசிரபுரம் சின்னக்கடைத்தெரு

ஜோசியம்.

நாராயணசாமிபிள்ளையவர்கள்

குமாரர்

ஜோசியம்

இரங்கசாமி பிள்ளையால்

தம்மிடமிருந்த ஏட்டுப்பிரதிகளைக்கொண்டு

பிழையறப் பரிசோதிக்கப்பட்டு

திரிசிரபுரம்

புஸ்தகஷாப்பு.

தி. சபாபதிபிள்ளை

யவர்களாற்றமது

திருச்சி

ஸ்ரீ மட்டுவார்குழலாம்பாள் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1905

மூன்றாம்பதிப்பு,

ரிஜிஸ்ட்டர் காப்பி ரயிட்.

உ

சிவமயம்.

ரிஜிஸ்ட்டர் அறிவிப்பு.

இதனால் சகலமானவர்களுக்குந் தெரிவிப்பது யாதெனில்

பதினெண்சித்தர்களி லொருவராகிய மகாமகுத்துவம்பொருந்திய புலிப்பாணிமகாமுனிவர் திருவாய்மலர்ந்தருளிய சோதிடம் மூந்நூறு என்னுமிப்பாடல்கள் இதுவரையி லெவர்களும் அச்சிடாமலிருந்ததை அநேகர் வேண்டுகோளின்படி திருச்சினாப்பள்ளி புஸ்தகவியாபாரமும் திருச்சி ஸ்ரீ மட்டுமோர்குழலாம்பாள் அச்சுக்கூடத்தலைவருமாகிய தி. சபாபதிபிள்ளையவர்களால் அச்சிட்டு மகாகனம் பொருந்திய கவர்ன்மெண்டாரின் 1867 ௵த்திய 25-வது ஆக்ட்டு 20-வது பிரிவு 6-வது விதியின்படி ரிஜிஸ்டர்செய்து காப்பிரயிட் என்னும் சுதந்தரம் பெற்றிருப்பதால்) இதை எந்த அச்சுக்கூடத்தலைவர்களும் மற்றவர்களும் மேற்படியார் அநுமதியன்னியில் அச்சிடக்கூடாது அப்படி அச்சிடுவாராகில் சட்டப்படி நடத்தப்படும்.

இப்புத்தகமும், தமிழ், தெலுங்கு, கிரந்தம் முதலானபாஷைகளிலுள்ள மற்றபுத்தகங்களும் வாங்கவிரும்புவோர் இதனடியிற்கண்ட விலாசப்படியெழுதிவேண்டியபுஸ்தகங்களை வி. பி. மூலமாயும் முன்பணம் அநுப்பியும் நேரிலும் பெற்றுக்கொள்ளலாம். அரையணாத் தபால்முத்திரையனுப்பினால் (கேட்லாக்) புத்தகலீஸ்டு அனுப்பப்படும்.

தி. சபாபதிபிள்ளை.

புஸ்தகஷாப்பு திருச்சினாப்பள்ளி.

புலிப்பாணிமகாமுனிவர்.

உ

ஓம்சரஹணபவ சண்முகதேவாயநம:

புலிப்பாணிமகாமுனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

ஜோசியம்-௩௱.

காப்பு.

ஆதியெனும்பராபரத்தின் கிருபைகாப்பு
அன்பானமனோன்மணியாள் பாதங்காப்பு
சோதியெனும்பஞ்சகர்த்தாள் பாதங்காப்பு
சொற்பெரியகரிமுகனுங் கந்தன்காப்பு
நீதியெனுமூலகுரு முதலாயுள்ள
நிகழ்சித்தர்போகருட பாதங்காப்பு
வாதியெனும்பெரியோர்கள்பதங்காப்பாக
வழுத்துகிறேன்ஜோசியத்தின் வண்மைகேளே. (௧)

சத்தியேதயாபரியே ஞானரூபி
சாம்பவியேமனோன்மணியே கபாலிசூலி
முத்தியேவேதாந்த பரையேஅம்மா
முக்குணமேமுச்சுடரே மாயாவீரி
வெற்றியேமூவர்களுக் கருளாய்நின்ற
வேணிகையேசாமளையே பொன்னேமின்னே
சித்திடையேசோதிடமும் முன்னுரையா
சின்மயத்தின்கணேசனுட காப்பாம்பாரே. (௨)

நட்பாச்சி உச்சம் பகை நீசம்.

(சூரியன்.)

தானென்றசூரியனுக் காட்சிசிங்கம்
தன்மையுள்ளமேஷமது உச்சமாகும்
தானென்றதுலாமதுவும் நீசமாகும்
தனியானதனுவுடனே மீனம்நட்பாம்
மானென்றமற்றேழு ராசிதானும்
வரும்பகையாமென்றுனக்கு சாற்றினோம்யாம்
கோனென்றபோகருட கடாக்ஷத்தாலே
குணமானபுலிப்பாணி குறித்திட்டேனே. (௩)

(சந்திரன்.)

பாரப்பாசந்திரனுக் காட்சிநண்டு
பாங்கானவிடையதுவே உச்சமாகும்
வீரப்பாவிரிச்சிகமும் நீசமாகும்
விருதுபெற்றதனுர்மீனம் கன்னிநட்பு
ஆரப்பா அறிவார்கள் மற்றுமுராசி
அருளில்லாப்பகையதுவே யாகும்பாரு
கூரப்பாகிரகம்நின்ற நிலையைப்பார்த்து
குறிப்பறிந்தபுலிப்பாணி கூறினேனே. (௪)

(செவ்வாய்.)

கேளப்பாசெவ்வாய்க்கி மேஷம்தேளும்
கெணிதமுடனாட்சியது வாகும்பாரு
காளப்பாமகரமது உச்சமாகும்
நலமில்லாநீசமது கடகமாகும்
தாளப்பாதனுமீனம் ரிஷபம்கும்பம்
தயங்குகின்றகோதையுடன் மிதுனம்நட்பாம்

பாளப்பாகோல்சுங்கம் பகையாமென்று
பண்புடனேபோகரெனக் குறைத்தார்தானே. (௫)

(புதன்.)

தானென்றபுதனுக்கு மிதுனமாட்சி
தன்மையுள்ளகன்னியது மாட்சிஉச்சம்
மானென்றமீனமது நீசமாகும்
மனதரிவாய்கடகமரி பகையாமென்று
வானென்றமற்றேழு ராசிதானும்
வகையானநட்பென்று வாழ்த்தினோம்யாம்
நானென்றபோகருட கடாக்ஷத்தாலே
நவக்கிரகநிலையறிவாய் நன்மைதானே. (௬)

(வியாழன்.)

ஓமென்றவியாழனுக்கு ஆட்சிகேளு
உண்மையுடன்தனுமீன மிரண்டேயாகும்
காமென்றகற்கடகம் உச்சமாகும்
கனமில்லாமகரமது நீச்சவீடாம்
போமென்றவிரிச்சிகமும் பகையதாகும்
புகழ்பெற்றமற்றுமுறு ராசிநட்பாம்
நாமென்றபோகருட கடாக்ஷத்தாலே
நயமாகபுலிப்பாணி நவின்றிட்டேனே. (௭)

(சுக்கிரன்.)

கேளப்பாசுக்கிரனுக் கெருதுகோலும்
கெணிதமுடனாட்சியது உச்சம்மீனம்
வாளப்பாகோதையவள் நீச்சமாவள்
வகையில்லாசிங்கமுடன் விரிச்சிகந்தான்
ஆளப்பாபகையதுவே யாகும்ஆறும்
அளவில்லாநட்பென்றே யறைந்தவாறு
மாளப்பாபோகருட கடாக்ஷத்தாலே
மார்க்கமுடன்புலிப்பாணி யறிவித்தேனே. (௮)

(சனி.)

தேனென்றசனிதனக்கு மகரம்கும்பம்
தெகிட்டாதஆட்சியது உச்சம்கோலாம்
மானென்றமேஷமது நீசம்மற்ற
மற்கடகசிம்மமொடு விரிச்சிகந்தான்

ஊனென்றவீண்பகையாம் மற்றோறாறும்
உள்ளபடிநட்பாகு முடவனுக்கே
கோனென்றகுருவருளாம் கடாக்ஷத்தாலே
கொற்றவனேபுலிப்பாணி கூறினேனே. (௯)

(ராகு-கேது.)

பாரப்பாருகுடனே கேதுவுக்கும்
பாங்கானவீடதுவேகும்பமாட்சி
வீரப்பாவிரிச்சிகமும் கடகம்உச்சம்
விருடையரிஷபமது நீச்சம்சிம்மம்
காரப்பாபகையாகும் மற்றேழ்நட்பாம்
காண்பதுவும்மூன்றுபதி னொன்றும்சொல்லார்
ஆரப்பாபோகருட கடாக்ஷத்தாலே
அப்பனேபுலிப்பாணி அறிவித்தேனே. (௰)

(துவாதச லக்கினபெயர்.)

சீர்மலிமுதற்பாகத்தின்பலன்றான் சிந்திதங்கிலேசமெய்சொரூபம்
பேர்மலிவயதும்பகர்தனுத்தானும் பெருநிதிகீர்த்திமூர்த்திகளும்
ஏர்மலிசுபசந்தோஷமுநிறமும் இலக்கணமுபாங்கமேமுதலாம்
தார்மலிபோகர்தாளிணைவணங்கிச் சாற்றினேன்புலிப்பாணிதானே()

(௨-மிடம்.)

தானமிகுரெண்டிடத்தின் பெயரைக்கேளு
தனம்குடும்பம்மொழிசெரிநேத் திரமும்வித்தை
ஈனமிலாச்செல்வமுடன் சாஸ்திரவாக்கு
இரும்பொன்னும்முபதேச மியம்புகேழ்வி
மானமிகுசவுபாக்கியங் கமனம்புத்தி
மற்றுமுள்ளநவரெத்தின வகையின்பேதம்
ஊனமிலாமிவைபார்த்து முணர்த்துமென்று
உரைத்திட்டேன்புலிப்பாணி உறுதியாமே. (௧௨)

(௩-மிடம்.)

ஆனமூன்று மிடத்தினரும்பலன்
மானவீரியம் மற்றுயிர்சேர்க்கையும்
தானயோகந் தயிரியஞ்சகோதரர்
ஈனவேலை இருங்கலன்வீரமே, (௧௩)

(௪-௫-மிடம்)

வித்தைவாகனம் வீடுசுபஞ்சுபம்
மெத்தையன்னை மிகுசுகான்கதாம்

பத்தின்பாதி பழையசீமான்மந்திரம்
வித்தைபுத்தி புத்திரர்செல்வமே (௧௪)

(௬-மிடம்.)

ஆறுமிடத்தினது பலன்றானப்பா
ஆயுதத்தால்ரணஞ்சொல்லு ஞாதிதுன்பம்
வீரானயுத்தமொடு திரவியநஷ்டம்
மிகுதிருடர்ஜலமடந்தை வினையுஞ்சோர்வும்
கூரானமெய்வாதை பெண்ணால்கண்டம்
கூடுமேபெரும்பாலும் நோயுமென்று
பேரானசிறைச்சாலை கிட்டுமென்று
பேசினேன்புலிப்பாணி பிரியத்தோடே. (௧௫)

(௭-மிடம்.)

சப்தமத்தின்பலன்கேளு மணமதாகும்
தகுமடந்தைபுதல்வர்க்குச் சாற்றுமின்பம்
சித்தமுளவிபகார மனஞ்சுற்றத்தார்
அபிமானமரசரது சேர்சன்மானம்
தத்துகயல்விழிமாது சேர்க்கைநன்றாய்
சதிருடனே தான்வந்து சேருமென்று
கொத்தாகநேயறிந்து கூறுவாரேல்
குறிதப்பாபலன்வந்து கூடுமன்றே. (௧௬)

(௮-மிடம்)

அஷ்டமயோக மரும்பிணிசண்டையும்
நஷ்டங்கிலேசம் பகைநன்மரணமும்
துஷ்டடம்பமும் குன்றுமலையேறி
கஷ்டப்பட்டு கலங்கிவிழுதலே (௧௭)

(௯-மிடம்)

ஒன்பதாம்பல னுகுமுபதேச
மின்பரூப மிகும்பணிரூபமும்
வன்பதான பரியும்வளப்பமும்
தன்மதானந்தனங்களுஞ்சாற்றுவர். (௧௮)

(௰-மிடம்)

பத்தாகுமிடத்தினது பலனைக்கேளு
பட்டணங்கள்தாபித்தல் பவங்களோடு

வித்தானபலபுண்ணியந் தேசாபிமானம
　　வீரான அரசனொடு கருமம்ஞானம்
சித்தமதிலிரக்கமிகு தெய்வபக்தி
　　சேருகின்றசவுரியமுங் கெர்ப்பமூணும்
நத்துகின்றபூசையொடு மனைவிசேர்க்கை
　　நலமாகவிப்பலனை நவிலுவாயே. (௧௯)

(௧௧-மிடம்)

பத்தின்மேலொன்றாகும் பலனைநன்றாய்
　　பகருகிறேன்பயிர்வளப்பம் பரிநல்வேழம்
வித்தைமிகுலாபகல் லறிவுசேர்க்கை
　　மிகுமனதிற்றுக்கமொடு சிவிகைசேரும்
உத்தரியஞ்செறிந்தபசும் பொன்னையொத்த
　　உயர்மணவியோகமது முதலாயுள்ள
மெத்தவேநீயறிந்து விளம்புவாயேல்
　　வேதமாயுன்வார்த்தை விரும்புவாரே. (௨௰)

(௧௨-மிடம்)

பத்தின்மேல்இரண்டாகும் பெயரைக்கேளு
　　பரதேசவுத்தியோகம் பணத்தின்சோர்வு
சத்தானபலபோகி சயனத்தியாகம்
　　தர்மமொடுகேர்மபலன் சவுக்கியமாக
வித்தானபலபுண்ணிய விவாதமோடு
　　விளைந்திடுமேதொழிலான பலதானங்கள்
கத்தாதேபோகருட கருணையாலே
　　கரைத்திட்டேன்புலிப்பாணி கருத்தைத்தானே. (௨௧)

நவக்கிரகஅதிகாரம்.

சோதியென்றகுருபதியும் வெள்ளிநீலன்
　　சொலிக்கின்றகதிர்மதிசேய் கணக்கன்பாம்பு
ஆதியென்றராசிபனி ரெண்டுக்குள்ளே
　　அடக்கிவைத்தார்கோள்களையும் ஆயன்தானும்
வாதியென்றஞானியுமே பலவாறாக
　　வையகத்திலூட்டிவைத்தார் வரிசையாக
சாதகமாய்சென்மனுக்கு சுட்டிக்காட்டி
　　சமர்த்தாகப்பலன்சொல்லும் குறியைக்கேளே. (௨௨)

மேடலக்கினபலன்.

கேளப்பாமேடத்தில் செனித்தபேர்க்கு
　　கெடுதிமெத்தசெய்வனடா கதிரோன்பிள்ளை
ஆளப்பா அகம்பொருளும் நிலமும்ஈய்ந்தால்
　　அவன்விதியுங்குறையுமடா அன்பாய்க்கேளு
கூளப்பாகோணத்தி லிருக்கநன்று
　　கொற்றவனேகேந்திரமும் கூடாதப்பா
தாளப்பாபோகருட கடாக்ஷத்தாலே
　　தனவானாய்வாழ்ந்திருப்பான் இசையிற்சொல்லே. (௨௩)

ரிஷபமிதுனலக்கின பலன்.

சொல்லப்பா எருதோடு மிதுனத்தோர்க்கு
　　சுகமெத்த உண்டென்று சொல்லுவார்கள்
அல்லப்பா அந்தணரும் கேந்திரமேற
　　அவர்செய்யுங்கொடுமையிது மெத்தவுண்டு
தள்ளப்பாதரைபொருளும் தனமும்நாசம்
　　தார்வேந்தர்தோஷமுடன் அரிட்டம்செப்பு
குள்ளப்பாகுருபதியுங் கோணமேற
　　கொற்றவனேகுழவிக்கு நன்மைகூறே (௨௪)

கடகம்.

கூரப்பாகடகத்தில் செனித்தபேர்க்கு
　　கொடுமைபலன்தந்திடுவார் சுக்கிராச்சாரி
வாரப்பாவரம்பெற்ற இந்திரசித்து
　　வகைமடிப்பாய்மாண்டானே வெள்ளியாலே
சீரப்பாதிரிகோணம் மறைந்துநிற்க
　　சிவசிவாசெம்பொன்னும் ரதங்களுண்டு
கூரப்பாமற்றவிடம் கூடாதப்பா
　　கொற்றவனேநிலைசமயம் கூர்ந்துபாரே. ([illegible])

சிம்மம்.

பாரப்பாசிங்கத்தில் செனித்தபேர்க்கு
　　பவுமனுமேதிரிகோண மேறிநிற்க
சீரப்பாசெம்பொன்னும் செல்வம்பூமி
　　சிவசிவாசிக்குமடா சென்மனுக்கு
வீரப்பாமற்றயிடந் தனிலேநிற்க
　　வெகுமோசம்வருகுமடா வினையால்துன்

கூரப்பாபோகருட கடாக்ஷத்தாலே
 கொற்றவனேபுலிப்பாணி குறித்திட்டேனே. (௨௬)

கன்னி.

குறித்திட்டேன்கன்னியிலே குதித்தபேர்க்கு
 குற்றம்வந்துசேருமடா குருவினாலே
பரித்திட்டேன்பண்டுபொருள் நிலமும்சேதம்
 பகருகின்றகுருபதியும் கோணமேற
சிரித்திட்டேன்சென்மனுக்கு வேட்டலுண்டு
 செந்திருமால்தேவியுமே பதியில்வாழும்
குறித்ததொருமனைதனிலே தெய்வமுண்டு
 குற்றமில்லைபுலிப்பாணி கூறினேனே. (௨௭)

துலாம்.

கூறினேன் கோலுடமில்லுமாகில்
 கொற்றவனேகதிரவனும் கோணமேற
சீரினேன்சென்மனுக்கு யோகம்மெத்த
 சிவசிவாசிவபதவி கிட்டும்செப்பு
மாரினேன்மற்றவிடந் தன்னில்நிற்க
 மார்த்தாண்டன்திசையுமது ஆகாதப்பா
தேரினேன்போகருட கடாக்ஷத்தாலே
 திடமானபுலிப்பாணி தெரிவித்தேனே. (௨௮)

விருச்சிகம்.

தெரிவித்தேன் தேளினில்லம் சென்மந்தோன்ற
 செழுமதியும்கோணத்தில் சேரநன்று
அறிவித்தேன் அகம்பொருளும் அடிமைசெம்பொன்
 அப்பனேகிடைக்குமடா அவனில்வாழ்வன்
பரிவித்தேன்கேந்திரமும் கூடாதப்பா
 மரையவனேகொடும்பலனை குறித்துசொல்லு
தெரிவித்தேன்போகருட கடாச்சத்தாலே
 தேர்ந்துநீபுலிப்பாணி நூலைப்பாரே. (௨௯)

தனுசு.

பாரப்பாவில்லுதனில் உதித்தபேர்க்கு
 பகருவேன்புந்தியுமே பகையுமாவர்
சீரப்பாசென்னல்விளை பூமிதோப்பும்
 சிவசிவாசெப்பொன்னும் சேதமாகும்

நீரப்பாநெடுமாலும் கோணமேற
 நீனிலத்தில்பேர்விளங்கும் நிதியுமுள்ளோன்
ஆரப்பாபோகருட கடாக்ஷத்தாலே
 அப்பனேபுலிப்பாணி பாடினேனே. (௩௰)

மகரம்.

அரைந்திட்டேன் இன்னமொன்று அன்பாய்க்கேளு
 அப்பனேமகரத்தில் உதித்தசெய்க்கி
திரந்திட்டேன்திரவியமும் மனையும்சேதம்
 தேசமாளரசனுட பகையுண்டாகும்
குறைந்திட்டேன்கொடுஞ்சேயும் கோணமேற
 கோவேறுகழுதைகளும் காவல்மெத்த
பரந்திட்டேன்போகருட கடாக்ஷத்தாலே
 பதியறிந்துபுவியோர்க்குப் பாடினேனே. (௩௧)

கும்பம்.

பாடினேன்இன்னமொரு புதுமைகேளு
 பாங்கானகும்பத்தி லுதித்தசெய்க்கி
ஆடினேன்அசுரர்குரு கோணமேற
 அப்பனேஉப்பரிகை மேடையுண்டு
தேடினேன்திரவியமும் சென்னல்பூமி
 திடமாகச்சேருமடா செல்வமுள்ளோன்
கூடினேன்கேந்திரமும் நட்புமேற
 கொற்றவனே துர்ப்பலனைக்கூறுவாயே. (௩௨)

மீனம்.

கூரேநீமீனத்தில் குழவிதோன்ற
 கொற்றவனேமாலோடு வெள்ளியாகா
ஆரேநீஅகம்பொருளும் நிலமுஞ்சேரும்
 அப்பனே அங்கத்தில் மச்சமுண்டு
பாரேநீகோணத்திலிருந்தபேர்க்கு
 பகருவாய்நற்பலனை யறிந்துநீதான்
யேரேநீபோகருட கடாக்ஷத்தாலே
 யெமலோகஞ்சேர்வனடா இயம்பினேனே (௩௩)

குளிகன் நிலமை

காணப்பா இன்னமொரு செயலைக்கேளு
 கனமுள்ளகுளியனுமே பதியில்நிற்க

ஆணப்பா அகம்பொருளும் நிலமுங்காடி
அப்பனே அயன்விதியும் தீர்க்கஞ்சொல்லு
கூறப்பாகுளியனுமே துதியில்நிற்க
கொற்றவனே கலகனடாநேத்திரரோகன்
தானப்பா தனவிரயம்தோஷம்சொல்லு
தரணிதனில்துஷ்டனென்று கூறுகூறே. (௩௪)

இதுவுமது

கூறப்பாகுளிகனுமே மூன்றில்நிற்க
கொற்றவனே துணைவனுடன் போரும்செய்வன்
வீரப்பாவிரகனடா வாய்ச்சமர்த்தன்
விளம்புகிறேன்நாலினுட விபரங்கேளு
பாரப்பாபதிகடந்து கிரியில்வாசம்
பாலனவன்சிலகாலம் வாழ்ந்திருந்து
கூறப்பாபோகருட கடாக்ஷத்தாலே
குற்றமில்லைபுலிப்பாணி கூறினேனே (௩௫)

இதுவுமது

கூறினேன்கிரிஐந்தில் முடவன்பிள்ளை
குணமாகவாழ்வனடா சேய்க்கிதோஷம்
தேரினேன்வீரனடா சத்துருபங்கன்
திடமாகவாழ்வனடா தனமுமுள்ளோன்
ஆரினேன்அயன்விதியு மெத்தவுண்டு
அப்பனே அடுத்தோரை காக்கும்வீரன்
கூறினேன்குளியனுமே ஆரில்நிற்க
கொற்றவனேஇப்பலனை கூறினேனே. (௩௬)

இதுவுமது.

குறித்திட்டேன்குளிகனுமோ யேழில்நிற்கக்
கொற்றவனேகுடும்பிக்கிக் கண்டம்சொல்லு
சிரித்திட்டேன் சென்மனுக்கு விகாதத்தாலே
சிவசிவாசெம்பொன்னும் நஷ்டமாகும்
அரித்திட்டேன்அட்டமத்தில் குளிகன்நிற்க
அப்பனேஅழும்பனடா ஜலத்தால்கண்டம்
முறித்திட்டேன்போகருட கடாக்ஷத்தாலே
முகரோகமுண்டென்று மூட்டுவாயே. (௩௭)

இதுவும

மூட்டுவாய்குளிகனுமோ பாக்கியத்தில்
முகவரியன் அழும்பனடா பிதுர்துரோகி

கூட்டுவாய்குவலயத்தில் தனமுமுள்ளோன்
குற்றமில்லைகருமத்தின் குறியைக்கேளு
நீட்டுவாய்நீநிலத்தில் கருமிதுரோகன்
நிலையறிந்துநீயறிவாய் அய்யம்வாங்கி
தீட்டுவாய்தின்பனடா விரலேஉச்சம்
சிறப்பாகசெப்புவாய் திண்ணந்தானே. (௩௮)

இதுவுமது.

தானென்றபதினொன்றில் குளிகன்நிற்கத்
தரணிதனிலபேர்விளங்குந் தனமுமுள்ளோன்
யேனென்றஅயன்விதியும் அறிந்துசெப்பு
யென்மகனேவசியனடா ஜாலக்காரன்
வீணென்றவிரயனடா ரசவாதத்தால்
விளம்புகிறேன்வீடுமனை கொதுவைவைப்பன்
கோனென்றபோகருட கடாக்ஷத்தாலே
கொற்றவனேவியத்தில்நின்ற பலனைக்கூறே. (௩௯)

சூரியன் நில்மை

பாரப்பாமூன்றாறு பத்துலொன்று.
பகருகின்றபன்னொன்றில் வெய்யோன்நிற்கில்
சீரப்பாசிலனுட மனையில்தானும்
சிவசிவாதெய்வங்கள் காத்திருக்கும்
வாரப்பாவாகனமும் ஞானம்புத்தி
வளமானபுத்திரர்கள் அரசர்நேசம்
கூரப்பாபுரிவனடா சத்துருபங்கன்
கொற்றவனேமூர்க்கனென்றுகூறுகூறே. (௪௰)

இதுவுமது.

கூறேநீராறும் ரெண்டிரெண்டு
கொற்றவனேபாக்கியமும் யேழோடஞ்சில்
ஆரேநீ ஆதித்த னிருந்தாரானால்
அப்பனேஅங்கத்தில் காந்தலுண்டு
சீரேநீசொற்பனமும் சிரங்குகண்ணோய்
சிவசிவாசிந்தித்த தெல்லாமாகும்
கூறேநீபோகருட கடாக்ஷத்தாலே
கொலையினர்பகையுமது வருதுஞ்சொல்லே. (௪௧)

சந்திரன் நிலைமை

கேளப்பாகலையினுட பெருமைசொல்வேன்
கனமுள்ளதனலாபம் கேந்திரகோணம்
ஆரப்பா அகம்பொருளும் நிலமூங்காடி
அப்பனேகிட்டுமேடா கரவையுள்ளோன்
சூழப்பாசுகமுண்டு ஜென்மனுக்கு
சுயதேசபரதேச அரசர்நேசம்
கூரப்பாகொடியோர்கள் சேர்ந்துநோக்க
கொற்றவனேகலைவலுவை கூர்ந்துசெப்பே (௬௨)

இதுவுமது

சூடப்பாசந்திரனூர் மூன்றேழ்ஐந்து
சுத்தஇந்துபன்னொன்றில் தனித்திருக்க
மாடப்பாமந்திரங்கள் செய்வன்காளை
மகத்தானவா தமொடு வயித்தியம்செய்வன்
கூடப்பாகுடும்பமது விருத்தியாகும்
குவலயத்தில்ஏதிரிக்கி மார்பிலாணி
வீடப்பாபோகருட கடாக்ஷத்தாலே
விதமறிந்துபுவியோர்க்கு விளம்புவாயே, (௬௩)

செவ்வாய் நிலைமை.

கேளப்பாசெவ்வாயும் ஒன்றுபத்து
கனமுள்ளதனலாபம் ஆறில்குக்க
ஆளப்பா அகம்பொருளும் நிலமும்செம்பொன்
அப்பனேகிட்டுமேடா தொழிலுமுள்ளோன்
சூழப்பாசுகமுண்டு சென்மனுக்கு
சுயதேசபரதேச அரசர்நேசம்
கூளப்பாகுடித்தலைவன் சத்துருபங்கன்
கொற்றவனேவகையாகப் பகர்ந்தசொல்லே, (௬௪)

இதுவுமது

சொல்லப்பாமூன்றெட்டு பன்னிரெண்டும்
சுகசப்தகேந்திரமும் பாக்கியம்ரெண்டில்
அல்லப்பா அத்தலத்தில ஆறல்குக்க
அப்பனே அகம்பொருளும் நிலமும்நஷ்டம்
குள்ளப்பாகுடும்பமது சிதறிப்போகும்
கொற்றவனே குருவுக்கு தோஷமுண்டாம்

வல்லப்பாபோகருட கடாக்ஷத்தாலே
வளமாகபுலிப்பாணி வசனித்தேனே. (௬௫)

வியாழன் நிலைமை.

பாரப்பாபரமகுரு நாலேழ்பத்து
பகருகின்றகோணமுடன் தனமும்லாபம்
சீரப்பாசென்மனுக்கு யோகம்செப்பு
செந்திருமால்தேவியுமே பதியில்வாழ்வள்
கூரப்பாகுடினுதன் கண்ணுற்றாலும்
குவலயத்தில்வெகுபேரை ஆதரிப்பன்
ஆரப்பா ஆறெட்டு பன்னிரெண்டு
அரைகின்றேனதின்பலனை அன்பாய்க்கேளே. (௬௬)

இதுவுமது

கேளப்பாயெட்டுக்கு வேசிகள்ளன்
கெடுதியுள்ளமனைவிபகை ஞேயாம்கண்டம்
ஆளப்பா அரசர்பகை பொருளுஞ்சேதம்
அப்பனே அவமானம் கொள்வன்டம்பன்
தாளப்பா ஆறுக்கு தோஷமுண்டு
தார்வேந்தர்பகையுமுண்டு ரோகமுண்டு
கூளப்பாஈராறில் எங்கோனுட்சி
குற்றமில்லைசென்மனுக்கு யோகங்கூறே. (௬௭)

சுக்கிரன் நிலைமை

கேளப்பா அசுரகுரு கேந்திரகோணம்
கெட்டவர்கள்கண்ணுற்று பார்த்திட்டாலும்
ஆளப்பா அசுரகுரு பலனளிப்பர்
அப்பனேஉப்பரிகைமேடையுண்டு
தாளப்பாவயிரங்கள் முத்துமாலை
வளமாகப்பொருந்திருக்கும் வளவிலேதான்
நீளப்பாநின்றதொரு இராசியாதி
நிலையறிந்துபுவியோர்க்கு நிகழ்த்துவாயே (௬௮)

இதுவுமது

பாரப்பாபனிரெண்டு மூன்றுரெட்டில்
பலமுள்ள அசுரகுரு அதனில்தோன்ற
வீரப்பாவிதிகுறைவு வெதர்ஞேய்வாதம்
விளங்குகின்றசெம்பொன்னும் மனையும்நஷ்டம்

கூரப்பாகுழவிக்கி மனோதரமும்பாண்டு
 கொற்றவனேகுன்மமொடு சயமும்சோகை
சீரப்பாசுராறில் சுங்கன் ஆட்சி
 சிவசிவாசயனசுகம் யோகஞ்சொல்லே (௪௯)

சனி நிலைமை.

கனமுள்ளநவமாறு லாபம்மூன்று
 கதிர்மைந்தனதிலிருக்க விதியும்தீர்க்கம்
தனமுண்டுபிதுர்தோஷம் சத்துருபங்கம்
 தரணிதனில்பேர்விளங்கும் அரசன்லாபம்
குணமுள்ளகருமத்தி லிருக்கநல்லன்
 கொற்றவனேவாகனமும் தொழிலுமுள்ளோன்
பொணம்போலபோகாதேசபையில்கூறு
 பூதலத்தில் யென்னாலேப்புகழுவாயே. (௫௰)

இதுவுமது தோஷ நிவர்த்தி

பாரப்பா இன்னமொன்று பகரக்கேளு
 பானுமைந்தன்பன்னொன்றி லமைத்தவாறும்
சீரப்பாசிறந்தகுரு சப்தமத்தில்
 சீரிவரும்கரும்பாம்பு நாலிலேற
ஆரப்பா ஆரல்யிரு மூன்றதாகும்
 அப்பனே அருக்கனுந்தான் மூன்றில்போக
வீரப்பாவிலகுமடா தோஷம் தோஷம்
 விதியுண்டுசென்மனுக்கு விளம்பக்கேளே. (௫௧)

சரராசி.

சூடப்பாசரராசி செனித்தபேர்க்கு
 சுகமில்லைலாபாதி பதியினாலே
ஆடப்பா அகம்பொருளும் நிலமும்சேதம்
 அப்பனே அரசரிட தோஷமுண்டாம்
தேடப்பாதிரவியமு மளித்தாரானால்
 திடமான அரிட்டமடா தேடமாட்டான்
வீடப்பாகோணத்தி லிருக்கநன்று
 விளம்பிபேன்புலிப்பாணி வினையைப்பாரே.

திரராசி.

பாரப்பாதிரராசி செனித்தபேர்க்கு
 பாவகானபாக்கியாதி பதியுமாகா

கூரப்பாகோணத்தில் மேவினாலும்
 கொற்றவனேபலனளிப்பன் அரசன்லாபம்
வீரப்பாமற்றயெடந் தனிலேநிற்க
 வெகுபயமாம்பலனில்லை வினையில்துன்பம்
சிரப்பாபோகருட கடாக்ஷத்தாலே
 சிரப்பாகபுலிப்பாணி செப்பினேனே. (௫௩)

உபயம்.

செப்புவாய்உபயத்தில் செனித்தபேர்க்கு
 சிரந்தவொருசப்தமனு மாகாதப்பா
ஒப்புவாய்உலகத்தில் அவதிமெத்த
 ஊழ்வினையைத்தடுப்பாரு முலகிலுண்டோ
தப்புவாய்திடல்நாசம் தனமும்நாசம்
 தார்வேந்தர்பகையுமுண்டு தேகதுன்பம்
இப்புவியில்போகருட கடாக்ஷத்தாலே
 இடமறிந்துதிசையறிந்துயியம்புவாயே (௫௪)

கொடிமாலை மச்சம்.

கூரப்பாகுருவோடு வெய்யோன்பாம்பு
 கொற்றவனே குருமனையில் கூடிநிற்க
சிரப்பாசென்மனுக்கு தோஷமில்லை
 செப்புகிறேன்கொடிமாலை விழுகாதப்பா
ஆரப்பாஅங்கத்தில் மச்சமுண்டு
 அப்பனே அரவோடு அணலன்சேர
கூரப்பாகொடிமாலை மச்சமுண்டு
 கொற்றவனேகுழவிக்கிக் கூறுவாயே. (௫௫)

கேளப்பாகுடினாதன் ஆட்சிஉச்சம்
 கெட்டவர்கள்கண்ணுற்று நோக்குனாலும்
சூளப்பாசுகமில்லை களவுபோகும்
 சோற்றுத்துணிக்கையேந்தி நிற்கச்செய்யும்
ஆளப்பா அகத்திலே துன்பங்காணும்
 அப்பனே அரண்மனையார்பகையுண்டாகும்
கூளப்பாகூட்டுறவு பிரிந்துபோகும்
 கொற்றவனேகொடுந்துன்பம்வினையும்பாரே.

சகடயோகம்.

சீரேநீகுருவுக்கு வியமாரெட்டில்
செழுமதியுமதிலிருக்க சகடயோகம்
ஆரேநீ அமடுபயம் பொருளும்நஷ்டம்
அப்பனேபேர்விளங்கும் நிதியுமுள்ளோன்
கூரேநீகுருவுக்கு கேந்திரகோணம்
குழவிக்கிநிதிகல்வி மெத்தவுண்டு
பாரேநீபோகருட கடாக்ஷத்தாலே
பாடினேன்புலிப்பாணி பதமாய்த்தானே. (௫௭)

அன்னியபீசம்.

பாரப்பாபனிரெண்டில் மதியும்நிற்கப்
பகருகின்றபுவுமனுமே மதிக்கியெட்டில்
சீரப்பாசெவ்வாய்க்கி யெட்டில்தீயர்
சிவசிவாசென்மனுமோ அன்னியபீசம்
ஆரப்பா அயன்விதியை அரையலாமோ
அப்பனே அணலனொடு குளிகன்சேர்ந்து
கூரப்பாகுடியிருக்க அட்டமத்தில்
கொற்றவனே அவைபோலேகூறுவாயே. (௫௮)

தாரையோகம்.

பாரப்பாபால்மதிக்கி நான்கில்வெள்ளி
பாங்குள்ளவெள்ளிக்கி நான்கில்இந்து
ஈரப்பாஇல்லுக்கு இவர்கள்நான்கில்
இடிபோலேகுமுருமடா தாரையோகம்
சீரப்பாசென்மனுக்கு சிவிகைகாடி
சிரப்பாளவாகனமும் நிலமும்செம்பொன்
கூரப்பாபோகருட கடாக்ஷத்தாலே
குடிலுதன்பெலமறிந்து கூறுவாயே (௫௯)

இதுவுமது

பாரப்பாபதினைந்து நாளிலேயும்
பகருகின்றபால்மதியும் வெய்யோனைத்தான்
சீரப்பாசிரியே அரவந்தீண்டில்
செத்திடுவர்போர்முகத்தில் அனந்தம்மன்னர்
ஊரப்பாஊரெங்கும் பேதிஅம்மை
உத்தமனே சவுமாரியாலேசிக்கு

யாரப்பாமன்னர்களு மடியாவிட்டால்
மகத்தான அன்னமது அரிதாய்போமே. (௬௰)

தேவன்முனி.

பாரப்பாஇருமூன்றில் புந்திநிற்க
பகருகின்றபரமகுரு யேழில்நிற்க
ஆரப்பா அசுரகுரு யெட்டில்நிற்க
அப்பனேமீனத்தில் அருக்கன்பிள்ளை
வீரப்பாவில்வளவில் சேயும்நிற்க
விளங்குகின்றமற்றோர்கள் யெங்கும்நிற்க
கூரப்பாகுமரனையுங் கண்டுங்காணார்
குவலயத்தில்தேவனென்று கூறினேனே. (௬௧)

தேவதைவசியன்.

ஆமென்றசெவ்வாயும் ராகுமாந்தி
அப்பனேரெண்டோனைக் கூடிநிற்கில்
போமென்றபூதலத்தில் பரமன்பூசை
புகழ்பெரிய அய்யனொடு ருத்திரன்ருத்திரி
ஓமென்றஓங்காளி வீரபத்திரன்
ஓதிடுவன்ஆகாச மாடன்தானும்
தாமென்றபோகருட கடாக்ஷத்தாலே
தப்பாமல்செய்திடுவன் சென்மன்தானே. (௬௨)

இதுவுமது,

தாமென்றஅம்புலிக்கு நாலாமாதி
தயவாகலெக்கினத்து நாலோன்தானும்
யேனென்றயெவ்விடத்தில் கூடிட்டாலும்
இதமாகஅசுரகுரு இணங்கிநிற்க
தேனென்றதேவிபரா துர்க்கைபூசை
திடமாகச்செய்திடுவன் வராகியோடு
கோனென்றகொடியோர்கள் எதிரில்லார்கள்
கொற்றவனேவசியனடா கூறுகூறே. (௬௩)

கேளப்பாஈரைந்தில் மூக்கோள்நிற்க
கெதியுள்ளசன்னியாசி யோகம்யோகம்
ஆளப்பா அத்தலத்தில் இருகோள்நிற்கில்
அப்பனேதபசியடா யோகிஞானி
ஊளப்பாலநகோளும் குணமாய்நிற்கில்
குவலயத்தில்புனிதனடா ஞானியாகி

வீளப்பாவிண் ணுலகத் தேவரோடு
விதமாகவீற்றிருப்பன் ரிஷிகளோடே. (௬௪)

ஸ்திரிகளால்பொருள்சேர்தல்.

கூடினேன்கரும்பாம்பு செவ்வாய்நீலன்
கொற்றவனேஓரிடத்தில் கூடிநிற்க
தேடினேன்னதையவிட பொருளுஞ்சேரும்
திடமானமனையுமது கட்டுவானும்
சூடினேன்சுகமுண்டு ஜென்மனுக்கு
சுருதிமொழிபிசகாது சிலகாலத்தில்
ஆடினேன் அழுதாலும் வினையும்போமோ
அப்பனே அமடுகளுந் திடமாய்ச்சொல்லே. (௬௫)

தேசாந்திரம் போகுதல்.

பாரப்பாபரமகுரு சனியும்பாம்பும்
பலமாகசரஉபய மமர்ந்துநிற்க
சீரப்பாசென்மனுமே ஊரைவிட்டு
சிவசிவாசிலகாலந் தேசஞ்செல்வன்
கூரப்பாகுடிநாதன் வலுத்திருக்க
கொற்றவனேகுமரனுந்தான் குடியில்வந்து
வீரப்பாவெகுகாலம் வாசஞ்செய்வன்
விளம்பினேன்புலிப்பாணி விளம்பக்கேளே. (௬௬)

பரதேசம்போகுதல்.

பாரப்பாஈராறேன் இருநான்கோனும்
பகருகின்றசெவ்வாயும் மூவர்சேர்ந்து
கூரப்பாயெவ்விடத்தில் கூடிட்டாலும்
கொற்றவனேபரதேசம் போவன்காணே
சேரேசீசுந்திரனும் கண்ணுற்றாலும்
சிலகாலந்தங்கிருந்து செம்பொன்தேடி
ஆரப்பா அவன்பதியில் வந்துவாழ்வன்
அப்பனேபுலிப்பாணி அரைந்திட்டேனே

கைம்பெண்சேர.

வீரப்பாயின்னமொரு புதுமைகேளு
விளம்புகிறேன்வீரியன் வீட்டில்தானும்
ரப்பா அசுரர்குரு செவ்வாய்கூடில்
அப்பனே அமங்கலியை அணைந்துவாழ்வன்

கூரப்பாகுமரனுக்கு வித்தைபுத்தி
குவலயத்தில்நிதியுண்டு சிப்பினூல்பார்ப்பன்
சீரப்பாபோகருட கடாக்ஷத்தாலே
சிறப்பாகபுலிப்பாணி செப்பினேனே. (௬௮)

மகாராஜயோகம்.

பாரப்பாபதிக்கேழு நாலேழெட்டில்
பாங்கானகோள்களது சேர்ந்துநிற்க
சீரப்பாசென்மனுந் தனித்துநில்லான்
செம்பொன்னும்கோடியுண்டு சிறப்பாய்வாழ்வன்
வீரப்பாவெகுபூமிக் கரசனாகி
வீரர்படைகரிமாவும் ரதங்களுள்ளோன்
கூரப்பாகுவலயத்தில் யென்னூல்பாரு (௬௯)
குணமாகப்புலிப்பாணி குறித்திட்டேனே.

இதுவுமது.

கொள்ளப்பாகோள்ஒன்று சரமாய்நான்கில்
கொற்றவனேயேகசக்கிர வர்த்தியாவன்
அள்ளப்பாஆனைபரி சேனைகூட்டம்
அணியணியாயிருக்குமடா அனேகமாக
உள்ளப்பாஉத்தமர்கள் அருளும்பெற்று
உலகிலுள்ளஅரசரிடம் பகுதிவாங்கி
இல்லப்பாஇவ்வுலகில் சேல்க்கண்ணாளை
இதமாகசுகித்திருப்பன் அனேகம்பேரே. (௭௰)

இதுவுமது.

சூடினேன்யின்னமொரு சேதிகேளு
சுபருடனேநாலுபேர் கூடிநிற்க
ஆடினேன் அதற்குநால் மற்றோரெல்லாம்
அப்பனே அவனிதனில் முழுதுவாழ்வன்
கூடினேன்கோவேறு கழுதைகோடி
கொற்றவனேதுரகங்கள் கோடாகோடி
தேடினேன்தேர்வீரர் படையுமெத்த
திக்கெட்டுமாளுமன்னன் தெரிந்துகொள்ளே. (௭௧)

இதுவுமது.

ஆரப்பா அஞ்சுபேரொன்றாகூடி
அப்பனேமற்றவர்கள் ஒற்றிராமல்

கூரப்பாதுன்றுகளில்தனித்திருக்க
கொற்றவனேகுவலயங்களெல்லாமாள்வன்
பாரப்பாபடைவீரா ஜெனங்கள்மெத்த
பரக்குமடாகொடித்திரையும் கடலுக்கப்பால்
சீரப்பாசெம்பொன்னும் விளையும்பூமி
சிக்குமடாபுலிப்பாணி செப்பினேனே. (எஉ)

இதுவுமது.

அரைந்திட்டேன்நாலுபேர் கூடிநிற்க
அப்பனேஅதற்குமற் றோர்கள்நிற்க
ப ரைந்தி டேன்பாருலக மாளும்வல்லன்
பகருகின்றசேனைரதம் கணக்கோயில்லை
சிரந்திட்டேன்சிற்றரசர் மெத்தவுண்டு
செகத்திலேபேருள்ள ராசனாகி
குரைத்திட்டேன்கொடுமன்னர் எதிர்த்தாரானால்
கூற்றுவனைப்போலிருப்பன் கூறினேனே. (எங)

இதுவுமது.

பாரப்பாமேடமுதல் கடகம்மற்றும்
பகருகின்றகிரகங்க ளிருவராக
ஆரப்பாஅகங்கள்தனி லமர்ந்திருக்க
அப்பனேஅயிஸ்வரியம் மெத்தவுண்டு
சீரப்பாசெம்பொன்னும் ரதங்கள்மெத்த
சிரந்தவொருபடைவீரர் கரிமாவுண்டு
தூரப்பாதுலைபூமிக் கரசனாகி
தொல்புவியில்வாழ்ந்திருப்பன் சூழ்ந்துபாரே. (எங)

இதுவுமது.

பாடினேனின்னமொன்று பகரக்கேளு
படவரவுபரமகுரு சேர்ந்துநிற்க
கூடினேன்குளிர்ந்தமதி அருகில்நிற்க
கொற்றவனேகுவலயமும் ஆளும்வல்லன்
தேடினேன்தேர்வீரர் கோடாகோடி
திடமுள்ள துரகங்கள்ரதங்கள்மெத்த
நாடினேன்போகருட கடாக்ஷத்தாலே
நாடெல்லாமாளுமன்னன் நயந்துபாரே (எரு)

இதுவுமது.

கூறினேன்கலைமதியும் ஒன்றிலநிற்க
குருவெள்ளிதேர்பாகன் ஆறேழெட்டில்
மாறினேன்மற்றோர்கள் மூன்றுபத்து
மைந்தனேலாபத்தி லமரநன்று
சீறினேன்செம்பொன்னும் கோடியுண்டு
சிவசிவாசீர்பெருகும்செல்வமுள்ளோன்
தேறினேன்காலாள்கள் மெத்தவுண்டு
திடமாகப்புலிப்பாணி தெரிவித்தேனே (எசா)

இதுவுமது.

பாரப்பாபனிரெண்டில் வெள்ளிநிற்க
பாங்கானரெண்டதனில் குருவுமேற
கூரப்பாலெக்னாதி கேந்திரகோணம்
கொற்றவனேபாக்கியாதி லாபத்தோடு
வீரப்பாவிவர்நோக்க மிகுபொன்சேரும்
விதமானமுப்பதினா யிரந்தானாகும்
சீரப்பாபோகருட கடாக்ஷத்தாலே
சிறப்பாகப்புலிப்பாணி செப்பினேனே. (எஎ)

இதுவுமது.

பாரப்பாமகரமுதல் நண்டுக்குள்ளே
பகருகின்றபானுமைந்தன் அதிலேதோன்ற
சீரப்பாசெழுமதியும் கேந்திரமேற
சிவசிவாயென்னசொல்வேன் அரசன்சென்மம்
ஆரப்பாஅகிலங்க ளெல்லாமாளும்
அப்பனேஅரசனுட கொடியைப்பார்த்து
காரப்பாநகைக்குதடா சீமான்சோலை
நன்றாகபுலிப்பாணி நவின்றிட்டேனே (எஅ)

இதுவுமது.

ஆரப்பாகரும்பாம்பு ஆறிலேற
அப்பனேசெம்பாம்பு பீராறேற
சீரப்பாசிறந்தகுரு கேந்திரமேற
சிவசிவாஅஷ்டலெட்சுமியாள்யோகம்
கூ ப்பாகெணங்களுக்கு பெலிகொடுத்து
ெ கணத்திலுள்ளதிரவியமும் வெளியெடுத்து

பாரப்பாபாக்கியங்கள் கன்னல்பார்ப்பன்
பண்பாகபுலிப்பாணி பகர்ந்தேன்பாரே. (௭௯)

புதையல்தோன்ற.

கூரப்பாகருமாதி நாவில்தோன்ற
கொற்றவனே குடினுதன் கோணம்ரெண்டில்
சீரப்பாசென்மனுக்கு புதையல்கிட்டும்
செகத்தில்நல்லபேர்விளங்கும் செய்யுள்வல்லோன்
ஆரப்பா அஸ்வங்கள் காடியுண்டு
அப்பனே அன்னசத் திரமுங்கட்டி
வீரப்பாவெகுபேர்க்கு அமுதளிப்பன்
விதமானபுலிப்பாணி விளம்பினேனே. (௮௰)

ஆமப்பாயின்னமொரு சேதிகேளு
அப்பனேதனநிதியன் கருமன்லாபன்
தாமப்பா தனம்குவியும் நால்வர்மாற
தரணிதனில்பேர்விளங்கோன் சிவிகையுள்ளோன்
வேமப்பாபகைவருடன் சேர்ந்துகெட்டால்
வீதிகளில் அமடுபிச்சை எடுப்பன்காளை
போமப்பாபோகருட கடாக்ஷத்தாலே
பூதலத்தில்புலிப்பாணி அரைந்திட்டேனே. (௮௧)

மருந்தால்கண்டம்.

சொல்லுகிறேன்இருநாவில் செவ்வாய்தோன்ற
சூரியனுரரவுடனே சேர்ந்துநிற்க
வில்லவேவிஷந்தீண்டி சாவான்சென்மம்
விதமானகளத்திரத்தால் வேதைமெத்த
கல்லவேலெக்கினேச னுராமாதி
நஞ்சுள்ளகரும்பாம்பு சேர்ந்திட்டாலும்
புல்லவேமருந்தாலே கண்டம்சொல்லு
பூதலத்தில்புலிப்பாணி களரிட்டேனே. (௮௨)

அட்டமன்விதி.

பாரப்பா அட்டமனு மெவரானாலும்
பலமுள்ளோர்அப்பலனை பணிந்துகேளு
சீரப்பா சிறைமரணம் கிரிமேலேறி
சிவசிவாவீழ்ந்திடுவன் தேசம்செல்வன்

கூரப்பாகொடும்பகையும் கொடுவாள்காயம்
குடிமன்னுஞ்சிவனமும் மோசக்கேடு
வீரப்பாவிஷபயமும் அம்மைபேதி
விளையுமடாபலதுன்பம் வினையைக்கேளே. (௮௩)

இதுவுமது.

கேளப்பாபீசத்தில் நோயுண்டாகும்
கெதியுள்ளகுளவிக்கி ரோகங்கிட்டும்
வீளப்பாதொங்கிடுவன் வெகுபேர்காண
விளங்குகின்ற தூக்குமரக்கோவில்தானும்
பாரப்பாபீரங்கி வெடியால்கேடு
பலதுன்பம்விளையுமடா பொருளும் நஷ்டம்
நீளப்பாநீர்பயமும் தீயால்வேதை
நீரிடியும்விழுகுமடா நிசஞ்சொன்னேனே. (௮௪)

அட்டமன்நிலமை.

பாரப்பாஇன்னமொன்று பகரக்கேளு
பதமுள்ள அட்டமனு மட்டமத்தில்
கூரப்பாகுழவிக்கி ஆண்டுஒரு
கொற்றவனேசத்துருவும் கூடிநேரக்க
ஆரப்பா அயனவிதியும் அற்பமாகும்
அம்புலியும்உச்சகேத் திரத்தில்நிற்க
சிரப்பாஜென்மனுமே அன்பதுக்குள்
சிவலோகஞ்சேர்வனென்று தெளிந்துசெப்பே. (௮௫)
அரைந்திட்டேன்யின்னமொன்று அன்பாய்க்கேளு
அட்டமத்தோன்மூன்றினிலே யமர்ந்தவாறும்
கரந்திட்டேன்கருவூரி லிருந்துவந்த
காளையவன்நூறுண்டு வசிப்பனப்பா
பரைந்திட்டேன்பகைவர்களு மெதிர்த்தாருனல்
பாலனுமேபோர்புரிவன் நிதியுமுள்ளோன்
சிரந்திட்டேன்போகருட கடாக்ஷத்தாலே
சிறப்பானபுலிப்பாணி சொன்னேன்பாரே.

இதுவுமது.

பாரப்பாயின்னமொரு புதுமைகேளு
படவரவுசனிசெவ்வாய் வெய்யோனேழில்

வாரப்பாவந்ததொரு தாரமெல்லாம்
வையகத்தில்மாண்டிடுவர் வரிசையாக
ஆரப்பா அட்டமத்தி லிவர்கள்ருக்க
அப்பெண்ணின்கணவனுமோ முந்திசாவன்
சீரப்பாபோகருட கடாக்ஷத்தாலே
சிரப்பாகப்புலிப்பாணி நூலைப்பாரே. (௮௭)

சொல்லப்பாசுடர்வெள்ளி யெட்டில்நிற்க
சுகமானகட்டில்மெத்தை மாடகூடம்
அல்லப்பா அகம்பொருளும் விலமுங்கிட்டும்
அரண்மனையில்சேவகமும் செய்வன்காணே
தள்ளபபாதரைபொருளும் விலமுமெல்லாம்
தந்தசுக்கிரன்வாங்கியவன் பின்னால்கேளே
வல்லப்பாபோகருட கடாக்ஷத்தாலே
வளமானபுலிப்பாணி பாடினேனே. (௮௮)

ஆரடாயின்னமொரு சேதிகேளு
அட்டமத்தில்கருநாக மமைந்தவாறும்
சீரடாசெல்வனையும் அரவந்தீண்டி
செத்திறந்துபோய்மடிவன் செகத்திலேதான்
பாரடாபரமகுரு வேந்தன்நோக்க
படவரவுதீண்டாது பாலனைத்தான்
ஊரடாவுன்னுதலால்!கேடுமுண்டு
உத்தமனே ஆரூனைக் கூர்ந்துசொல்லே (௮௯)

பரந்திட்டேனின்னமொன் றுபகரக்கேளு
பானுமந்தன்பால்மதிக்கி யெட்டில்நிற்க
சிறந்திட்டேன்ஜென்மனுக்கு அனேகதுன்பம்
செத்திறந்துபோவதற்கு யெண்ணங்கொள்வன்
அனாகன்டேன் அகம்பொருளும் விலமும்நஷ்டம்
அப்பனே அசனிடை தோஷமுண்டாம்
குறைந்திட்டேன்குடிநாதன் கேந்திரிக்க
குற்றமில்லைபுலிப்பாணி கூறக்கேளே.

நன்றாகபாம்புகள்தான் நாலிலேனும்
நலமாகஈராறும் இருநான்கேனும்
சென்றிட்டதியர்பவர் செப்பாரப்பா

திரமானகாலில்நின்றால் மாதர்தோஷம
குன்றிவிடும்ராசில் பாகரோகம்
குணமானயிருநான்கில் கூறும்பாம்பால்
நன்றாகமிகுபயமா மற்றராசி
நலமென்றேபுலிப்பாணி நவின்றிட்டேனே. (௯௧)
கேளப்பாமலேதனத்தில் சப்தகோள்கள்
கெடிபெத்தமுடியாக சிமானென்றேன்
ஆளப்பாசேனைபரி வேடர்கூட்டம்
அணியணியாயிருக்குமடா அலங்கஞ்சுத்தி
நாளப்பாநவமணியும் பொருந்திநிற்கும்
நலமான துரகங்கள் ரதங்களுள்ளோன்
குளப்பாபோகருட கடாக்ஷத்தாலே
சுகமாகப்புலிப்பாணி பகர்ந்தேன்பாரே. (௯௨
ஆரப்பா அஞ்சுக்கு அஞ்சாம்வீட்டில்
அப்பனே அசுபர்களும் அமர்ந்துநிற்க
பாரப்பாபிதுருக்கு கண்டம்தெண்டம்
பலமாகசெப்புவாய் அரசர்தோஷம்
சீரப்பாசுபர்நிற்க செல்வமுண்டு
சிவசிவாபிதுருக்கு விதியும்தீர்க்கம்
கூரப்பாகுடிநாதன் கேந்திரகோணம்
கொற்றவனேபுலிப்பாணி குறித்திட்டேனே. (௯௩)

பிதிருக்குகண்டம்.

பாரப்பாயின்னமொருபுதுமைகேளு
பகலவனுஞ்சனியோடு பாம்புசேர
கூரப்பாகுமரனவ னுதிக்குமுன்னே
கொற்றவனேபிதுருக்கு கண்டஞ்சொல்லு
ஆரப்பா அத்தலத்தோன் சுபனைக்கூடி
அப்பனேகண்ணுற்று நோக்கினாலும்
சீரப்பாசிலகாலம் பிதுரிருந்து
சிவலோகமடைவனடா செயலைக்கூறே. (௯௪)

பிதுருக்கு இருபக்கம்கோள்கள்.

ஆச்சப்பாபத்தெட்டில் கோள்கள்நிற்க
அப்பனே அவரவர்கள் பொசிப்புநாளில்
கூச்சப்பாகுமவியுட பிதுரைத்தேடி
கொற்றவனேசண்டனுமே வருவான்கூறு

மூச்சப்பாமேதினியில் செம்பொன்தேடி
முகமினுக்கிமாதருடன் கூடிவாழ்வன்
யேச்சப்பாபோகருட கடாக்ஷத்தாலே
இடமறிந்துநிலேகூர்ந்து இயம்புவாயே. (௯௫)

தானேதானின்னமொன்று செப்பக்கேளு
நயவாகதனபதியுந் தனத்திலேற
கோனேதான்குமரனுக்கு தனமிருந்தும்
குவலயத்திற்செட்டியடா காசுயீயான்
மானேதான்மக்கள்பெண்டீர் புஷ்டியாக
மடிரோம்பஉண்ணுமல் பதனஞ்செய்வான்
வீணேதான்போகருட கடாக்ஷத்தாலே
விதமாகப்புலிப்பாணி உரைக்கக்கேளே. (௯௬)

நேத்திரஹீனம்.

பாடுவாய்பதியோனும் ரெண்டோன்கூடில்
பகருகின்றஅசுரகுரு பெலத்துநிற்க
கூடுவாய்குழவிக்கி நேத்திரஹீனம்
கொற்றவவேமாந்தியுமே கூடிநிற்க
தேடுவாய்ஜென்மரவ னுதிக்கும்போது
திடமாகச்செப்புவாய் நேத்திரமில்லே
ஆடுவாய்போகருட கடாக்ஷத்தாலே
அப்பனேபுலிப்பாணி அறிவித்தேனே. (௯௭)

கிரகமாறி யோகம்.

நானென்றகோள்களது மாறிநிற்க
தரணிதனில்பேர்விளங்குந் தனமுமுள்ளோன்
ஊனென்றஉடல்நாதன் பாம்புகூடில்
உத்தமனும்யோக்கியனும் புனிதன்சேயன்
கோனென்றகுமரியுட பூசைசெய்து
கொற்றவனேகுவலயத்தில் வாழ்ந்திருப்பன்
மானென்றமறலியய மில்லேயில்லே
மைந்தனேவிடமறிந்து வழுத்துவாயே. (௯௮)

நாலோன் கருமன்சேர.

சூடப்பாயின்னமொன்று செப்பக்கேளு
சுகமுள்ளநாலோனைக் கருமன்கூடில்
கூடப்பாகோவில்திருப் பணிகள்செய்வன்
கொற்றவனேவாகனமும் செம்பொன்கிட்டும்

வீடப்பாவெள்ளிக்கி அம்மன்துர்கை
விதமானபுந்திக்கி அய்யன்மாலோன்
பாடப்பாபவுமனுக்கு சுப்பிரமணியம்
பரமென்றசிவனுக்கு பொன்னக்கூரே. (௯௯)

இதுவுமது

கூரப்பாகதிருக்கு கணேசன்சத்தி
கொற்றவனே அம்புலிக்கி ருத்திரன்மாரி
ஆரப்பாவெகுபேர்க்கு அமுதளிப்பன்
அப்பனே அன்னசத்திரமுங்கட்டி
பாரப்பாபகைவர்களும கண்ணுற்றாலும்
பலன்குறைந்துபோகாது விதியும்தீர்க்கம்
கூரப்பாபோகருட கடாக்ஷத்தாலே
கொற்றவனேபுலிப்பாணி குறித்திட்டேனே (௱)

சந்திரன்-௧-௯-அ-ல் நின்றபலன்.

அரைந்திட்டேன்னின்னமொன்று அன்பாய்க்கேளு
அம்புலியும்ஆறெட்டு லெக்கனத்தில்
குரைத்திட்டேன்கொடியோர்கள் கூடிநோக்க
கூற்றுவனர்வக்கிடுவர் சிசுவைப்பற்றி
திரந்திட்டேன்திங்களொரு மூன்றுக்குள்ளே
திடமான அரிட்டமடா பத்துநாளில்
பரைந்திட்டேன்பாலனுக்கு விதியோஅற்பம்
பண்பாகபுலிப்பாணி உரைத்தேன்பாரே. (௧0௧)

சூரியனுக்குறு-௯-ல்-மதி.

பாரப்பாயின்னமொன்று பகரக்கேளு
பகலவனுக்கலேமதியும் கோணமேற
சேரப்பாபலவிதத்தால் திரவியம்சேரும்
செல்வனுக்குவேட்டனுண்டு கிரகமுண்டு
ஆரப்பா அமடுபய மில்லேயில்லே
அர்த்தராத்திரிதனிலே சப்தம்கேட்பன்
கூரப்பாகுமரனுக்கு யெழுபத்தெட்டில்
கூற்றுவனர்வருந் தறியை குறிப்பாய்ச்சொல்லே (௧0௨)

உ-ல்செவ்வாய்நிற்க

பாடினேனின்னமொரு புதுமைகேளு
பலமானசெவ்வாயும் துதியில்நிற்க

கூடினேன்இரகத்தில் வழக்கும்போரும்
குமரியவன்களைவனையும் கருதிப்பாரான்
தேடினேன்தையலுமோ மாண்டாளானால்
தனம்விரயம்சஞ்சலமும் அழுதுமாய்வன்
ஆடினேன ஆடவர்கள் அழுதகூவி
அவல்கடலே அவர்மடியில் போவோரே. (௧௦௩)

௪-ல்பாவர் நிற்க.

குறித்திட்டேனின்னமொன் றுரைக்கேளு
குற்றமுள்ளோர்காள்கதனி லமைந்தவாறும்
அருத்திட்டேனத்தலத்தோன் கேந்திரிக்க
அமவேந்துதிருமடா அகமுமுள்ளோன
சிரித்திட்டேன்ஜென்மனுக்கு வாகனங்களுண்டு
சிறப்பாகமேதினியில் லமாய்வாழ்வன்
பரித்திட்டேன்பெற்றவட்கு ரோகஞ்சொன்னேன்
பரமகுருபதியமர யோகந்தானே. (௧௦௪)

௪-ல்கேது நிற்க.

கேளப்பாயின்னமொரு புதுமைகேளு
கெடுதிசெய்யும்செம்பாம்பு நாலில்நிற்க
சீளப்பாஜெனித்தமனே சுத்தபாழாம்
சென்மனுக்குகிரகமுண்டு விதியும்கூறு
கூளப்பாகுளிகனுமோ சேர்ந்துநிற்க
குடியிருக்கருச்சில்லை கறவையில்லை
ஆளப்பா அன்னைக்கி தோஷம்தோஷம்
அத்திடலில்அரவுக்கு சாந்திசெய்யே. (௧௦௫)

தர்மகர்மாதிபதியோகம்.

செய்யப்பாயின்னமொரு சேதிகேளு
செயலாகவிதிகரும விருவர்கூடி
கையப்பாகண்ணுற்று நோக்கினாலும்
கனமுள்ளோரிருவருமே மாறினாலும்
அய்யப்பா அகம்பொருளும் நிலமுஞ்செம்பொன்
அப்பனேகிட்டுமடா ஜென்மனுக்கு
உய்யப்பாபோகருட கடாக்ஷத்தாலே
உத்தமனே புலிப்பாணி உரைத்தோம்நாமே

௫-௯-க்குடையவர்சேர.

அரைந்திட்டேனின்னமொரு சேதிகேளு
அப்பனே ஆறோனும் மூன்றோன்மேவ
திரந்திட்டேன்தேசத்துக் கள்ளர்நாட்டை
தீயாலேகொளுத்திடுவன சினமுமுள்ளோன்
உரைந்திட்டேன்உள்நாட்டு கள்ளர்கண்டால்
உள்ளபடிஆக்கினையை விதிப்பன்காணே
பரைந்திட்டேன்படையாட்சி ஆள்கள்மெத்த
பண்பாகபுலிப்பாணி அரைந்திட்டேனே. (௧௦௭)

௧௨-க்குடையவனும்குடும்பியும்-௭-ல்-நிற்க.

வீரப்பாயின்னமொரு வினையைக்கேளு
விரையாதிகுடும்பியுமோ ரேழில்நிற்க
சீரப்பாஜென்மனும் வேடதாரி
சிவசிவாபாடகனும் செய்புகழுள்ளோன்
கூரப்பாகுமரியினால் லாபமுண்டு
கொற்றவனேசெப்படி வித்தைகளும்செய்வன்
ஆரப்பா அரவத்தை பிடித்துவந்து
ஆட்டிவைப்பன் அனைவோரும் பார்க்கத்தானே (௧௦௮)

மாந்திரவாதி.

பாரப்பாயின்னமொரு புதுமைகேளு
பால்மதிக்கினாலோனும் சுங்கன்கூடில்
கூரப்பாயெத்திடத்தில் கூடிட்டாலும்
கொற்றவனேஜென்மனுமோ மாந்திரவாதி
வீரப்பாவராகிதுர்க்கை தேவிஅம்மன்
விதமானபூசைதனை மண்ணோர்போற்ற
சீரப்பாபோகருடகடாக்ஷத்தாலே
செப்பினேன்புலிப்பாணி செயலைத்தானே (௧௦௯)

சந்திரனும்-௧௨-டு-க்குடையவர்களுஞ்சேர.

செப்புவாய்சந்திரனும் ஈராறோனும்
சிவசிவாபஞ்சமத்தோன் மூவர்சேர்ந்து
அப்புவாய்ஆகாசக் கோபுரத்தில்
அப்பனேகம்பத்தை கட்டித்தா ம்
ஒப்புவாய்உலகத்தோர் மதிமயங்க
ஓகோகோ ஆகாசகரணம்போட்டு

தப்புவாய்தரணிதனில் கீழ்வந்து
  தார்வேந்தர்மனமகிழ பணிவன்பாரே.

ஆறுக்குடையவனும் லெக்கனதியு

பகருவாய்ஆறோனும லக்கனதி
  பன்னிரெண்டெட்டாறில் தீயரோடே
இகருவாய்தேகமது ஜென்மனுக்கு
  இளைத்துவிடும்ரோகங்கள் கிட்டுமேகிட்டும்
புகழுகின்றஆரவோடு ரெண்டோன்கூடி
  பூங்குழலேரெண்டதனி லமர்ந்துநிற்க
நிகழுகின்றநீணிலத்தில் கல்வியாலே
  நாலுவிதபிரசங்க வித்வானுமே (௧௧௧)

சூரியனுக்குமுன் பின் புந்திநிற்க.

தானென்றஇரவிக்கி முன்னேபுந்தி
  தனித்திருக்கப்புலிதனடா தரித்திரதோஷம்
தானென்றஇரவிக்கி பின்னேபுந்தி
  தரணிதனில்பேர்விளங்கும் தனமுமுள்ளோன்
தானென்றயிரவிக்கி பின்னேசேயும்
  தங்கிடவேபுத்திரர்கள் மெத்தவுண்டாம்
தானென்றகுருவோடு நீலன்மேவ
  தரணிதனில்செவிடனடா முடவன்பாரே. (௧௧௨)

சூரியனுக்கு பின் சனி.

அரைந்திட்டேனின்னமொன்று செப்பக்கேளு
  அனலனுக்குபின்னாலே அலரிமகன்
பரைந்திட்டேன்பண்டுபொருள் அழுங்கிட்டும்
  பார்தனிலேபரதார விசையனப்பா
குரைந்திட்டேன்குமரனுக்கு எட்டுபத்தில்
  குலவைவிட்டுவருவனடா சண்டன்தானும்
சிறந்திட்டேன்ஜென்மனுக்கு யோகஞ்செப்பு
  சிறப்பாகப்புலிப்பாணி செப்பினேனே. (௧௧௩)

௪-ல் மதி சுக்கிரன்.

ஆரப்பாயின்னமொருபுதுமை கேளு
  அம்புலியும்அசுரகுரு யேழில்நிற்க
கூரப்பாகிழவனுக்கு மாலையிட்டு
  குமரியவள்மதனத்தால் பலரைக்கூடி

சீரப்பாசெல்வனையும் பெற்றெடுத்து
  சிறப்பாகதொட்டிலிட்டு ஆட்டுவாளாம்
பாரப்பாபார்த்தவர்கள் பிரமிக்கத்தான்
  பாங்கியவள்ஸ்தனங்குலுங்க வருவாள்பாரே. (௧௧௪)

௫-ல்-வி-சந்-சு.

பாரப்பாயின்னமொன்று பகரக்கேளு
  பரமகுருபால்மதியும் வெள்ளிமூவர்
சீரப்பாஜென்மனுக்கு அஞ்சில்தோன்ற
  சிறப்பாகமேதினியில்நலமாய்வாழ்வன்
கூரப்பாகுருவிருந்தால் புத்திரரற்பம்
  குளிர்ந்தமதிதானிருந்தால் பெண்ணதாகும்
வீரப்பாவெள்ளிநின்றால் யோகம்மெத்த
  விளம்புவாய்புவியோர்க்கு உலகின்கண்ணே. (௧௧௫)
கண்ணப்பாயின்னமொரு கருத்தைக்கேளு
  கனத்ததொருலாபத்தில் நிதியில்தோன்ற
உண்ணப்பாஉயர்நிதியோன் நிதியில்தோன்ற
  உத்தமனுந்தண்டிகையும் துரகமுள்ளோன்
பண்ணப்பாபுதைப்பொருளும் கிட்டுங்கிட்டும்
  பலமானவித்தையடா யிருக்கும்பாரு
திண்ணப்பாபோகருட கடாக்ஷத்தாலே
  திடமானபுலிப்பாணி சாற்றினேனே. (௧௧௬)

௭-ல் குரு சந்திரன்.

பாரப்பாயின்னமொரு புதுமைகேளு
  பால்மதியும்பரமகுரு யேழில்நிற்க
சேரப்பாஜென்மனுக்கு வேட்டலில்லை
  செந்திருமால்தேவியுமோ விலகிநிற்பள்
கூரப்பாகுமரியவ ளில்லாமல்தான்
  குமரனுடவங்கிஷமும் நாசமாச்சு
ஆரப்பாஅயன்விதியை கூறலுற்றேன்
  அப்பனேபுலிப்பாணி பாடினேனே, (௧௧௭)

௮-ல் பு-சு.

பாடிடுவாய்புந்திவெள்ளி நாலில்நிற்க
  பகருகின்றபதியோனும் கேந்திரமேற
நாடிடுவாய்நாலுள்ளோன் சுபர்கள்நோக்க

நற்சுகமும்மேடையுண்டு நாடுமுள்ளோன்
கூடிடுவாய்குமரனுக்கு யோகம்மெத்த
குவலயத்தில்பேர்விளங் கோன்நிதியுமுள்ளோன்
ஆடிடுவாய்ஆரல்நிற்கும் நிலையைப்பார்த்து
அப்பனேபுவியோர்க்கு கூறுவீரே. (௧௧௮)

கூ-குடையவன் கேந்திரிக்க.

ஆரப்பாயின்னமொருசேதிகேளு
அப்பனே ஆறேனும் கேந்திரகோணம்
சிரப்பாஜென்மனுக்கு இராஜதோஷம்
செப்புகிறேன்சோரர்பயம் சோரத்தால்துன்பம்
கூரப்பாகுடும்பத்தில் களவும்போரும்
கூச்சலிட்டுவெளிவருவள் குமரிதானும்
வீரப்பாவிஷபயமும் வெடியால்துன்பம்
விளையுமடாபலதுன்பம் இன்னங்கேளே (௧௧௯)

௪-ல் சுக்கிரன்.

ஆரப்பாயின்னமொன்று அரையக்கேளு
அப்பனேஅசுரகுரு நாலிலேற
சீரப்பாசெழும்பதியும் ஜென்மம்ஜென்மம்
செல்வனுக்குயோகங்கள் கூறக்கேளு
வாரப்பாவாகனங்கள் பூமியுள்ளோன்
வளமானபோகனடா வையகத்தில்
கூரப்பாகொடுஞ்சனியும் பத்தில்நிற்க
கூறுவாய்குளவிக்கு யோகங்கூறே. (௧௨௦)

மதிக்கி-கூ-எ-அ-ல்-சுபர்

ஆரப்பாயின்னமொன்று அரையக்கேளு
அப்பனே அம்புலிக்கி ஆறேழெட்டில்
சிரப்பாசுபர்நிற்க ஜென்மன்தானும்
சிரப்பாகமேதினியில் நலமாய்வாழ்வன்
பூரப்பாபேய்பூதம் வசியமாகும்
பூதலத்தில்அரசனிடம் சேனைகாப்பன்
கூரப்பாகுடிநாதன் கெட்டானானல்
குமரனுக்குயோகங்கள் குலைந்துபோச்சே. (௧௨௧)

குரு சந்திரயோகம்.

கூரப்பாயின்னமொரு புதுமைசொல்வேன்
குமரனுக்குகுருச்சந்திர பலனைக்கேளு

சீரப்பாசெம்பொன்னும் மனையுங்கிட்டும்
ஜெனித்ததொருமனை தனிலே தெய்வங்காக்கும்
கூரப்பாகோதையரால் பொருளுஞ்சேரும்
குவலயத்தில்பேர்விளங்கோன் கடாட்சமுள்ளோன்
ஆரப்பா அத்தலத்தோன் மறைந்தானானல்
அப்பலனையரையாதே புவியுள்ளோர்க்கே. (௧௨௨)

௪-ல்-மதி-செ-கூ-க்குடையவன்.

ஆமப்பா இன்னமொன்று அரையக்கேளு
அம்புலியும்ஆறேனும் ஆரல்மூவர்
நாமப்பாநாலதனில் குடியிருக்க
நரசுகமுமில்லையடா ஜென்மனுக்கு
போமப்பாபுதல்வனையும் பெற்றெடுத்த
பொற்கொடியாள்புக்கிடுவள் சோரனோடே
வேமப்பாபோகருட கடாக்ஷத்தாலே
வினைப்பயனைப்புலிப்பாணி பாடினேனே. (௧௨௩)

வி-சு-சனி செ-பு.

போச்சப்பாயின்னமொரு பேச்சுகேளு
பொன்னுவெள்ளிசனிசெவ்வாய்புந்தி அய்வர்
யேச்சப்பாயெத்தலத்தில் கூடிட்டாலும்
யென்மகனேயென்னசொல்வேன் இராஜகள்ளன்
ஆச்சப்பா அரண்மனைக்குள் புகுந்தானானல
அங்கிருக்குந்தலையாரி உறங்கிப்போவான்
வீச்சப்பாபோகருட கடாக்ஷத்தாலே
விதமானபுலிப்பாணி விளம்பினேனே. (௧௨௪)

பாக்கியாதிபதி திரிகோணம்.

அரிவித்தேன் அஞ்சுக்கு அஞ்சோன்றானும்
அப்பனே அப்பதிக்கி கோணந்தன்னில்
தெரிவித்தேன்திரவியமும் காடியுண்டு
திடமானமனைகட்டி ஆளுவானும்
குரிவித்தேன்ஆலயமும் பழுதுபார்ப்பன்
கொற்றவனேரஜிதபாத் திரமுங்கொள்வன்
புரிவித்தேன்பதியோனும் வியமாரெட்டில்
பதருதேபண்டுபொருள் விரயமாமே. (௧௨௫)

சேய்க்கி-கூ-அ-௰உ-ல் சுக்கிரன்.

தோானசெவ்வாய்க்கி வியமாரெட்டில்
திடமுள்ளசுக்கிரனு மதனில்மேவ

பாரானபண்டுபொருள் பணிபால்வாதம்
 பகருகின்றபங்காளி துணைவனாலும்
கூறானகுழவிக்கி யெதிரியாலே
 கொற்றவனேயதிகாரி யாலும்வெற்றி
சீரானசெவ்வாயும் இதுபோல்செப்பு
 சிவசிவாசித்திரமும் திசையைப்பாரே. (௧௨௬)

நாலுபேர்கள்மறைந்தும் யோகம்வருவது.

வீரப்பாயின்னமொரு வினையைக்கேளு
 விளம்புகிறேன்நிதிகருமன் தனமும்நாலோன்
நாரப்பாநால்வர்களும் மூடமானால்
 நரபதிபோலிருப்பதற்கு வகையைக்கேளு
ஆரப்பா அருக்கன்பின் புந்திசேயும்
 அப்பனே அடைவாகத் தனித்திருக்க
சீரப்பாபோகருட கடாக்ஷத்தாலே
 சிறப்பாகமேதினியி லிருப்பன்பாரே, (௧௨௭)

ஆறுமிடம்தீயர்நிற்க.

பாரப்பாபகலவனும் சனிசேய்பாம்பு
 பகருகின்றஇக்கோள்க ளாரில்நிற்க
கூரப்பாகுமரனையும் சத்துருகண்டால்
 குவலயத்தில்புலிகண்ட பசுபோலாவார்
சீரப்பாசெம்பொன்னும் சென்னுடுண்டு
 செயலாகவாழ்ந்திருப்பன் விதியுந்தீர்க்கம்
ஆரப்பா அத்தலத்தோன் விழுந்துகெட்டால்
 அப்பனே அரியைப்போ லிருப்பன்பாரே. (௧௨௮)

இராசியாதி கொடியோரைச்சேர்ந்தது.

கூரேநீகொடியோர்கள் ராசியாதி
 கொற்றவனேகூடினால் கொடுமைமெத்த
யேரேநீராஜபயம் பொருளுஞ்சேதம்
 யிடந்தோஷம்பிணிகண்டம் களவும்போறும்
சீரேநீசந்திரனும் கண்ணுற்றாலும்
 செம்பொன்னும்கிட்டுமடா ஜென்மனுக்கு
வீரேநீபோகருட கடாக்ஷத்தாலே
 வினைப்பயனைப்புலிப்பாணி விரித்தேன்பாரே, (௧௨௯)

கூட்டக்கிரகம்.

ஆரப்பாநாலஞ்சு பேர்கள்கூட
 அப்பனேரெண்டொருவர் முன்பின்நிற்க
பாரப்பாபண்டுபொருள் பதியும்தீது
 பதிகடந்துஅலைவனடா·பொருளுங்கொஞ்சம்
 கூரப்பாகுடிநாதன் சேர்ந்திருக்க
கொற்றவனேகுழவிக்கி நிதியும்மெத்த
 சீரப்பாபோகருட கடாக்ஷத்தாலே
செப்பினேன்புலிப்பாணி திரமாய்த்தானே. (௧௩௰)

௫-௬-க் குடையவர் சேர

ஆரப்பா அயன்விதியை அரையக்கேளு
 அப்பனே அஞ்சுள்ளோன் ஆரோன்கூடில்
சீரப்பாஜென்மனுக்கு புத்திரதோஷம்
 சிவசிவாயிதுமூன்றில் சேர்ந்துநிற்க
கூரப்பாகொடியோர்கள் கண்ணுற்றாலும்
 கொற்றவனேகொள்ளிக்கிப் பிள்ளையில்லை
பாரப்பாபரமகுரு கண்ணுற்றாலும்
 பலனுண்டுபலதீர்த்த மாடச்சொல்லே. (௧௩௧)

௬-௬-ல்-சனி-சூரியன்சேர.

பாரப்பாபாக்கியமும் ஆரோன்வீட்டில்
 பகருகின்றசனியோடு வெய்யோன்மேவ
கூரப்பாகுழவிக்கி பாக்கியமுண்டு
 குவலயத்தில்பிரசங்கி செய்யுளுள்ளோன்
வீரப்பாமற்றவிடந் தனிலேநிற்க
 வினோதகனும்கூத்தாடி வேடக்காரன்
சீரப்பாபோகருடகடாக்ஷத்தாலே
 செயலரிந்துபுவியோர்க்கு செப்புவாயே. (௧௩௨)

வி-பு-சு-பு சனி-பு.

பாரப்பாகுருபுத்திசேர்ந்துநிற்கப்
 பாக்கியங்கள்கிட்டுமடா புனிதன்சேயின்
ஆரப்பா அசுரகுரு புந்திசேர
 அப்பனேபாடகனும் பெரியோர்நேசம்
கூரப்பாகொடுஞ்சனியும் புந்திமேவ
 கொற்றவனேகணிதனடா சத்துருயில்லை

வீரப்பாவிஷபயமும் இல்லையில்லை
வெகுதனங்களுள்ளவனும் விளம்பக்கேளே. (௧௩௩)

மதி-பு சனி-செ.

கேளப்பாகலைபுந்தி சனிசேய்சேர
கெட்டவனுமதுர்க்கிசதா நித்திரையுள்ளோன்
ஆளப்பா அகமில்லை தரித்திரனவன்
அப்பனே அயன்விதியும் மெத்தவுண்டு
சீளப்பாசேய்யிந்து சனிமால்வெள்ளி
சேர்ந்துநிற்க அய்யமெடுத் துண்பன்காணே
கூளப்பாகுருபார்க்க வேதையில்லை
கொற்றவனே குசவன்விதி கூறினேனே. (௧௩௪)

ச-அ-க-ல்-சூரியனும் புதனுஞ்சேர

பாரப்பாஈரிரண்டுதனில் யிருநான்கொன்றில்
பகருகின்றபகலவனும் புந்திகூடில்
நீரப்பாநிதிகருமன் கண்ணுற்றாலும்
நிலத்தில்நல்லபூபதிபோ லிருப்பன்காணே
கூரப்பாகுதிரைகளுங் காடியுண்டு
கொற்றவனேயேவலாள் மெத்தவுண்டு
ஆரப்பா அயிஸ்வரியம் மெத்தவாழும்
அப்பனேராசியுட பெலத்தால்கூறே. (௧௩௫)

ச-சூ, வி-சூ, சு-சூ--சு--சனி

ஆரப்பா அம்புலியும் ரவியும்சேர
அப்பனே தனமுண்டு களத்திரநேசன்
ஆரப்பா அரசனுடன் அருக்கன்சேர
அரசனொடு அயிஸ்வரியம் மெத்தவுண்டு
ஆரப்பா அசுரகுரு வெய்யோன்மேவ
அப்பனேவசியனடா களத்திரபோகி
ஆரப்பா அசுரகுரு நீலன்மேவ
அடங்காதகளத்திரமா மறிந்துசொல்லே. (௧௩௬)

செ-பு-வெ.

பாரப்பாபவுமனும் புந்திவெள்ளி
பாங்கானயெத்திடத்தி லமர்ந்திட்டாலும்
பாரப்பாபாலனுக்கு தேகபங்கம்
பதினெட்டுசித்தர்களும் செப்பலுற்றார்

பாரப்பாகுருவோடு சேயும்வெள்ளி
பார்மன்னர்நேசனடா பாக்கியமெத்த
பாரப்பாபவுமனும் புந்திமேவ
பண்டிதனும்பாக்கியமு முண்டுபாரே (௧௩௭)

விரையாதி யிரண்டாமிடமேற.

தானப்பாயின்னமொரு புதுமைகேளு
தனமென்றஇரண்டதனில் விரையன்நிற்க
ஊனப்பாஉப்பரிகை மாடகூடம்
உத்தமனேகட்டிடுவன் உதையம்பாரு
யேனப்பாயெங்கோனும் யிந்துபுந்தி
யிதமுள்ளசுக்கிரனு மில்லுமாகில்
சீனப்பாசெம்பொன்னும் சென்றுநிண்டு
சிவசிவாசித்திரமும் திசையில்சொல்லே (௧௩௮)

சூ-ச-செ-பு-வி, சூ-செ-சு-சனி.

விளம்பினேன்வெண்மதிசேய் புந்தியோடு
வெய்யவனுங்வியாழனும் சேர்ந்துநிற்க
விளம்பினேன்வினையனடா சென்மன்தானும்
வெகுபேரைக்கெடுத்திடுவன் கோள்சமர்த்தன்
விளம்பினேன்வெய்யவனும் சேய்சுன்நீலன்
வீற்றிருக்கவீடுதொறும் பலியேகொள்வன்
விளம்பினேன்போகருட கடாக்ஷத்தாலே
விதமாகபுலிப்பாணி விளம்பினேனே, (௧௩௯)

ச-வி-பு-ச-பு-சு.

ஆச்சப்பாஅம்புலியும் வியாழன்புந்தி
அடைவாகசேர்ந்திருக்க சென்மந்தானும்
ஆச்சப்பாஅழகனடா நிதியுமுள்ளோன்
அயன்விதியுமெத்தவுண்டு அரையக்கேளு
ஆச்சப்பாஅம்புலியும் புந்திவெள்ளி
அடைவாகமூவர்களும் சேர்ந்துநிற்க
ஆச்சப்பாஅழும்பனடா காமிதுஷ்டன்
அப்பனேபுலிப்பாணி அரைந்திட்டேனே. (௧௪௰)

சூ-பு-வி-வெ.

ஆரடாகுருபுந்தி வெய்யோன்வெள்ளி
அப்பனேநாலவர்களும் சேர்ந்துநிற்க

சீரடாசென்மனும் செம்பொன்னுள்ளோன்
திடமானபோகனடா வையகத்தில்
கூரடாகுருவெள்ளி ரவியுஞ்சேயும்
கொற்றவனேசேர்ந்திருக்க குடும்பிமெத்த
வீரடாபணியுண்டு நிதியுமுண்டு
வேட்டல்களும்மெத்தவுண்டு விளம்பினேனே. (கசுக)

விசனி-செ-பு-சந்-வெ, வி-பு-சனி-செ-ச.,

படித்திட்டேனின்னமொன்று பகரக்கேளு
பரமகுருசனிசெவ்வாய் புந்தியோடு
அடித்திட்டேனம்புலியும் வெள்ளிமேவ
அப்பனேஅண்டர்கள் அளவெடுப்பன்
குடித்திட்டேன்குருபுந்தி சனிசேயிந்து
கொற்றவனேசேர்ந்திருக்க தரித்திரதோஷம்
இடித்திட்டேன்போகருட கடாக்ஷத்தாலே
இதமானபுலிப்பாணிசாற்றினேனே. (கசுஉ)

சேய்க்கி-சு-எ-ல்-வெள்ளி.

பாரப்பாபவுமனுக்கு நாழேழ்வெள்ளி
பகருகின்றவெள்ளிக்கி ஐந்தேழ்லாபம்
சீரப்பாசேய்நிற்க ஜென்மந்தானும்
சிரப்பாகமேதினியில் நலமாய்வாழ்வன்
கூரப்பாகுடிநாதன் கேந்திரகோணம்
கொற்றவனேவாகனமும் தொழிலுமுள்ளோன்
பாரப்பாபாக்கியமும் நிலமுங்கிட்டும்
பகருவாய்திசைபுத்தியில் பலிக்குந்தானே. (கசுங)

வி-சு-சனி-பு-ச.

கூறினேன்குருவெள்ளி சனிமால்இந்து
கொற்றவனேசேர்ந்திருக்க அங்கயீனம்
தேரினேன்தேவகுரு புந்தியோடு
திடமாகமதிவெள்ளி சேர்ந்துநிற்க
ஆரினேனகம்பொருளும் நிலமும்செம்பொன்
அப்பனேகிட்டுமேடா அவனில்வாழ்வன்
சீரினேன்போகருட கடாக்ஷத்தாலே
சிரப்பாகபுலிப்பாணி செப்பினேனே. (கசுச)

ச-செ--பு--வி--வெள்ளி.

ஆச்சப்பாஅம்புலியும் வெள்ளியோடு
அடைவாககுருபுந்தி சேயுஞ்சேர
கூச்சப்பாகுலவானும் கிரகமுண்டு
குவலயத்தில் நிதிபணியும்மெத்தவுண்டு
பேச்சப்பாவெகுபேரை ஆதரிப்பன்
பிரபலமாய்வாழ்ந்திருப்பன் அவனிதன்னில்
வீச்சப்பாபோகருட கடாக்ஷத்தாலே
விதமாகபுலிப்பாணி விளம்பினேனே. (கசு

வி-சு-வி-சனி-பா- சனி- பு- சனி

செப்புவாய்குருவோடு வெள்ளிகூடில்
ஜென்மனுக்குயோகவிதி செம்பொன்னுள்ளோன்
அப்புவாய் அந்தணனும் நீலன்கூடில்
அப்பனேபுத்திரர்கள் ஈனமாகும்
ஒப்புவாய்உதயத்தில் சனியும்பாம்பும்
உத்தமனேநோயதுவே காத்திருக்கும்
தப்புசனிபுதனுதயம் தயவாய்சேர
தரணிதனில்கூனனடா தெரிந்துகொள்ளே (கசுசு)

சு-க்குடையவன்-உ-லும்-உ-க்குடையவன்-சு-லும்,

கூறினேன் ஆறோனும் மலைக்கிரெண்டில்
கொற்றவனேயெதிரினிட பொருளுஞ்சேரும்
நீரேநீகுடும்பாதி விழுந்துகெட்டால்
நிலத்தில்நல்லகளவாளி வஞ்சன்பொய்யன்
ஆரேநீதனபதியும் ஆறிலேற
அப்பனேயெதிரிக்கி அவைபோல்செப்பு
பாரேநீபோகருட கடாக்ஷத்தாலே.
பண்பாகபுலிப்பாணி பகர்ந்தேன்பாரே. (கசுஎ)

ஏழரைநாட்டுச்சனி.

பாரப்பாபனிரெண்டு ஜென்மம்ரெண்டில்
பங்கானமுடவன் சஞ்சாரம்காளில்
சீரப்பாசிரநோயும் அம்மைபேதி
சிவசிவாசலபயமும் பொருளுஞ்சேதம்
கூரப்பாகுடியோடிப் போகச்செய்வன்
கொற்றவனேகுடும்பத்தில்களவுபோகும்

வீரப்பாவெகுபோக்கு கொடியோனுகி
விளங்குவோன்புவிதனிலே விளம்பக்கேளே. (௧௪அ)

இதுவுமது

கேளப்பாகடகம்தேள் சிம்மம்ஜென்மம்
கெடுதிமெத்தசெய்வனடா வேதைதானும்
நாளப்பாநலமாகும் மற்றராசி
நரச்சுகமும்கிட்டுமடா வேட்டலுண்டு
கூளப்பாகோதையினல் பொருளுஞ்சேதம்
கொற்றவனேகடன்வந்து தீருமென்றே
ஆளப்பாதிசைபாரு வலுவைநோக்கி
அப்பனேமுடவன்செய் வலுவைக்கூரே. (௧௪௯)

வாக்கில்சனி

பாரப்பாஇன்னமொன்று பகரக்கேளு
பானுமைந்தன்பால்மதிக்கி வாக்கில்வந்தால்
சீரப்பாமேம்பாடு சவுக்கியம்செம்பொன்
சிவசிவாகிட்டுமடா வேட்டல்கூடும்
கூரப்பாகோதையினல் பொருளுஞ்சேரும்
கொற்றவனேகுடிநாதன் வலுவைப்பாரு
ஆரப்பாபோகருட கடாக்ஷத்தாலே
அப்பனேபுலிப்பாணி அரைந்திட்டேனே. (௧௫௦)

௫-ல் நாகம்.

பாரப்பாஇன்னமொன்று பகரக்கேளு
பஞ்சமத்தில்கருநாகம் அமைந்துநிற்க
சீரப்பாசெங்கதிரோன் பார்த்திட்டாலும்
ஜென்மனவன்பிரதேச வாசஞ்செய்வன்
ஆரப்பா அகம்பொருளும் நிலமும்கிட்டும்
அப்பனே அவன்பிதா லெச்சைபண்ணுன்
கூரப்பாகுமரனுக்கு அறுபத்தஞ்சில்
கூற்றுவனர்செகியாணஞ் சாற்றினேனே. (௧௫௧)

௫-க்குடையவன் பாம்பைசேர.

ஆச்சப்பாயின்னமொரு சேதிகேளு
அஞ்சுள்ளோன்தியனுய் அரவைக்கூடி
கூச்சப்பாநாடியே மூன்மில்நிற்க
குமரனுடகணவியெண்ணங் கருத்தைக்கேளு

பாச்சப்பாபுருஷனிடம் சண்டையிட்டு
பதரிவிழுந்தோடிவேள் கொடியனீவி
யேச்சப்பாவெகுபேர்க்கு யிவள்மேல்மோகம்
யிவளாலேகெட்டவர்கள் அனேகம்பேரே. (௧௫௨)

௩-க்குடையவனும் பாம்பைசேர.

பாரப்பாயின்னமொரு புதுமைகேளு
பாம்புடனேமூன்ருேனும் தீயனுகில்
கூரப்பாயெத்திடத்தில் கூடிட்டாலும்
குமரிகள்ளப்புருடனையும் கூடுவாளாம்
ஆரப்பா அகந்தனிலே யிவள்தான்மூப்பி
அக்கணவன் அவள்சொல்லை கடக்கமாட்டான்
ஊரப்பாவூரருகில் கடலுமுண்டு
உத்தமனேயிருக்குமடா ஆறுமாரே (௧௫௩)

௫-ல் ராகுநிற்க.

பாரப்பாயின்னமொன்று பகரக்கேளு
பஞ்சமத்தில்கருநாகமமைந்தவாறும்
சீரப்பாஜென்மனுக்கு புத்திரதோஷம்
தீர்ப்பதற்குவகைவிவரம் சொல்வேன்மைந்தா
கூரப்பாகோதையுமே அரசுசுத்தி
குற்றமில்லாகன்னியற்கு உத்தமஸ்நானம்செய்ய
வீரப்பாவிலகுமடா தோஷம்தோஷம்
விதியுள்ளஜென்மனவன் செனிப்பன்பாரே (௧௫௪)

ராகு கேந்திரகோணம்.

கேளப்பாயின்னமொரு புதுமைகேளு
கனமானகரும்பாம்பு கேந்திரகோணம்
ஆளப்பா அத்தலத்தோன் சுபரைக்கூட
அப்பனேசேர்ந்தாலும் கண்ணுற்றாலும்
சீரப்பாஜென்மனுக்கு யோகமெத்த
சிவசிவாகிளர்யோகம் திடமாய்செப்பு
கூரப்பாகுடினதன் சேர்ந்துநிற்க
குமரனுக்கு அனுதினமும் பலனேக்கூரே. (௧௫௫)

பாம்பு.

பாரப்பாயின்னமொரு புதுமைகேளு
பகருகின்றபாம்புடனே ஒருவன்சேர

வீரப்பாவிருபுரமும் மற்றோர்நிற்க
வேந்தனுக்குவேந்தனும் கொடியவீரன்
கூரப்பாஜெகமதினில் ஜெகமுமுள்ளோன்
கொற்றவனேதுரகமது மெத்தவுண்டு
வீரப்பாவேடர்படை கோடியுள்ளோன்
விதமானபுலிப்பாணி சொன்னோம்நாமே. (௧௫௬)

4-க்குடையவன் நின்றபதிக்கு-10-க்குடையவன்சேர.

பூட்டுகிறேன் இன்னமொன்று புதுமைகேளு
புகழ்பெரியஈரிரண்டுக் குடையோனின்ற
ஆட்டுகிறேன் அப்பதிக்கி பத்தோன் தானும்
அப்பனேஇரையோனைக் கூடிட்டாலும்
கூட்டுகிறேன்குழவிக்கி பூமிமெத்த
குவலயத்தில்பேர்விளங்கும் போகவானாய்
பூட்டுகிறேன்போகருட கடாக்ஷத்தாலே
பூதலத்தில்இரையோனைப் பார்த்துசொல்லே. (௧௫௭)

௧௨-௯-௮-ல் பாம்புதோன்ற.

பாரப்பாபனிரெண்டு யெட்டுஆறில்
பலமுள்ளபடவரவு அதிலேதோன்ற
வீரப்பாவேல்விழியாள் கலகமெத்த
விளங்குகின்றகணவனுக்கு ரோகஞ்சொல்லு
கூரப்பாகொழுநனால் குமரியாலும்
கொற்றவனேகுழவியினால் குடிக்கிகேடாம்
பாரப்பாபடவரவு பொல்லாதப்பா
பலதுன்பம்வருகுமடா திசையைநோக்கே (௧௫௮)

சூரியனுக்கு-௫-௮-௯-ல் சுபர்நிற்க

பாரப்பாபகலவனுக் கஞ்சுயெட்டு
பாக்கியத்தில்சுபர்நிற்க அதனுள்ளோர்கள்
சீரப்பா திரிகோண கேந்திரமேற
சிவசிவாபிதிருக்கு தனமும்செல்வம்
வீரப்பாவிதியுண்டு வெள்ளிபுந்தி
வீடானால்அமடில்லை ராஜயோகம்
கூரப்பாபோகருட கடாக்ஷத்தாலே
கொற்றவனே புலிப்பாணி கூறினேனே. (௧௫௯)

சூரி-சந்தி.

காணப்பாகதிரவனும் மதியுங்கூடி
கனமுள்ளலெக்கினத்தை கண்ணால்நோக்க
சீனப்பாசக்கிலியப் பெண்ணைஜென்மன்
சிரப்பாகசேர்ந்தணைவன் ஜெகத்திலேதான்
ஊணப்பாஉதையவனும் கண்ணுற்றாலும்
உத்தமனேஉலகத்தில் ஒருவர்பாரார்
வீணப்பாபோகருடகடாக்ஷத்தாலே
விதமாகப்புலிப்பாணி விளம்பினேனே. (௧௬௰)

இதுவுமது.

கூறேநீஉப்பரிகை மாடகூடம்
கொற்றவனேசயனசுகம் போகமுள்ளோன்
வாரேநீவாகனமும் நிதியுமுண்டு
வையகத்தில்விதியுண்டு வேசிநேசன்
ஆரேநீஅசுபர்களு சேர்ந்திருக்க
அப்பலன்கள்கெட்டாலும் அகமுமுண்டு
ஓரேநீஈராறில் உச்சமானால்
சிவசிவாதுன்பமொடு இன்பம்சொல்லே (௧௬௧)

மதி-௯-௮-௧௨-நின்றபலன்.

விளம்பிடுவேன்வெண்மதியும் யெட்டில்நிற்க
விதிதுரைவுநிதிமனையும் வித்தையுள்ளோன்
களங்கமுள்ளநீர்ப்பயமும் குளிருங்காச்சல்
கனமுள்ளதாய்தந்தைக் கருட்டஞ்சொல்லு
தளங்கொண்டஆறுக்கு கழிச்சல்போக்கு
தனவிரயம்விதிகுறைவு கருமமாகும்
விளங்குகின்றஅன்னைக்கி தோஷஞ்சொல்லு
விரையமடாவினைவுகெடும் ஈராருக்கே. (௧௬௨)

சேய் சுக்கிரன்.

பாரப்பாபவுமனுமே வியமாரெட்டில்
பகருகின்றபளிங்கனுமே பகைவன்வீட்டில்
சீரப்பாசென்மனுக்கு செனனபூமி
சிவசிவாசிக்குமடா ஜலத்தால்கேடு
ஊரப்பாஊராருகில் கிழக்குமேற்கு
உத்தமனேபுஞ்சைநிலத்தாலும்லாபம்

சீரப்பாபோகருட கடாக்ஷத்தாலே
சிறக்குமடாகனகமதுகையில்தானே. (௧௬௩)

அஞ்சில் தியர்நின்றபலன்.

தானென்றபஞ்சமத்தில் கொடியோர்நிற்கில்
தாரணியில்குடிவிளங்க புத்திரரில்லை
ஊனென்றஉதையாதி பெரியோர்சேர
உத்தமனேஉதித்தவொரு பாலன்தானும்
தேனென்றபிதுருக்கு உதவியுண்டோ
பரைச்சேரில்வில்வக்கண் மூளைத்தாப்போலே
சீனென்றசிவனுக்கு உதவாதப்பா
சிவசிவாபுலிப்பாணி செப்பினேனே. (௧௬௪)

அஞ்சில் சனிநின்றபலன்

சொல்லுகிறேன் அஞ்சுக்கு கிலேசனுவன்
சுயதேசபரதேச வாசம்சென்மன்
வில்லுகிறேன்விதிகுறைவு மெலிந்ததேகன்
விளங்குகின்றபுத்திரரும் பரந்துபோகும்
புல்லுகிறேன்பெரியோர்கள் கண்ணுற்றாலும்
பூதலத்திலதிகாரி பெரியோர்நேசன்
நல்லதொருதிசைபுத்தி பொருளுஞ்சேரும்
நலமறிந்துசெப்புவாய் சனிக்கிதானே. (௧௬௫)

லெக்கினத்தில் சனி.

பாரப்பாயின்னமொரு புதுமைகேளு
பலமுள்ளகதிர்மைந்தன் பதியில்நிற்கில்
சீரப்பாஇளமையிலே மனைவியாதி
செழுமையுள்ளபருவத்தில் செல்வமுண்டு
வீரப்பாவேந்தனுட பொருளும்சேரும்
விளங்குகின்றகொடியோர்கள் சேரலாகா
கூரப்பாபோகருட கடாக்ஷத்தாலே
கொற்றவனேபதியறிந்து பலனைக்கூறே. (௧௬௬)

௧௨-௬-௭-௮-இல்-சனி.

புகழ்கின்றஈராறு யிருநான்கேழில்
புனிதமுள்ளசனிரெண்டு நான்கில்நிற்க
இகழ்கின்றவாதநோய் நாய்கடிக்கும்
இதமுள்ளஅன்னைக்கி கண்டம்நான்கில்

நிகழ்கின்றரெண்டேழில் மனைவிநஷ்டம்
நிசம்சொன்னேம்பெட்டைக்கு உயிர்க்குச்சேதம்
மகிழ்கின்றஈராறில் விரையமாகும்
துலையுமடாமாடாடு துன்பஞ்சொல்லே. (௧௬௭)

கோசாரம்.

கேளப்பாகுருமூன்றில் கலைதானெட்டு
கேடுசெய்யும்சனிசென்மம் புந்திநாலில்
சீளப்பாசேயேழு செங்கதிரோன் அஞ்சும்
சீரிவரும்கரும்பாம்பு நிதியில்தோன்ற
ஆளப்பாஅசுரகுரு ஆறிலேர
அப்பனேதிசையினுட வலுவைப்பாரு
மாளப்பாகுற்றம்வரும் கோசரத்தாலே
குழவிக்கிகிரியாணங் கூர்ந்துசொல்லே. (௧௬௮)

பொது.

கேளேநீசேல்கன்னி யெருதுமேடம்
கெதியுள்ளமகரமடா கடகந்தன்னில்
கூளேநீகரும்பாம்பு அதனில்தோன்ற
கொற்றவனேயோகங்கள் புகழ்ந்திடாதே
சீளேநீகிரகங்கள் நான்குதிக்கில்
சிவசிவாசென்மனுக் கமைந்திருந்தால்
ஆளேநீயோகங்கள் கூறுஅல்லால்
அப்பனேஅஸ்தகிரி யோகஞ்சாற்றே (௧௬௯)

இதுவுமது.

சொல்லப்பாசெம்பாம்பு கோணம்லாபம்
சுயதேசபரதேச அரசர்லாபம்
சொல்லப்பாசெம்பாம்பு பொல்லாதப்பா
சிவசிவாசொர்ணங்கள் மனையும்சிக்கும்
இல்லப்பாயிந்திரனுர் பதவிகிட்டும்
இல்லரத்தில்வல்லனடா குணிதம்பார்ப்பன்
புல்லப்பாகருநாகம் கேந்திரங்கள்
புனிதமுள்ளசெம்பாம்பின் பதியைப்பாரே. (௧௭௰)

வாரேநீயின்னமொன்று வழுத்தக்கேளு
வளர்மதியும்நல்லவனு யமர்ந்திட்டாலும்
ஓரேநீசனியவனைப் பார்த்திட்டாலும்
செழுமையுள்ளசந்திரனுர் திசையைக்கேளு

கூரேநீகுமரனுக்கு பசும்பொன்கிட்டும்
குவலயத்தில்கடன்கொடுப்போன் வேந்தனுக்கு
பாரேநீபால்மதியும் பூசம்மூணில்
பகருவாய்புலிப்பாணி குறித்திட்டேனே. (களக)

காணப்பா இன்னமொரு கருத்துக்கேளு
கருமனுமோகருமத்துக் கருமஸ்தானம்
ஊணப்பாஉற்றதனம் லாபம்யேற
உத்தமனும்நிதியுடையோன் கருமமுள்ளோன்
தானப்பாதருமங்கள் யாகஞ்செய்வன்
தரணிதனில்கிராமங்கள் உண்டுபண்ணி
வீணப்பாபோகருட கடாக்ஷத்தாலே
விதமானபுலிப்பாணி விரித்தேன்பாரே. (களஉ)

சாற்றினேனின்னமொன்று செப்பக்கேளு
சந்திரனுர்க்கீரைந்தில் எங்கோநிற்க
கூற்றினேன்குமரனுக்கு யோகம்மெத்த
கோவையிடம்சேனுதி பதியுமாவன்
பூட்டினேன்பீரங்கி வெடியினுலே
போர்புரியும்வீரர்களைச் சின்னஞ்செய்வன்
நாட்டினேன்நரக்குருவும் தனுசிலேற
நலமாகபுலிப்பாணி யிடித்திட்டேனே. (களங)

இடித்திட்டேனின்னமொன்று யியம்பக்கேளு
இந்துவுக்கீராரைந்தில் எங்கோநிற்க
அடித்திட்டேன் அத்தலத்தோன் கேந்தரிக்க
அப்பனேசாமியுந்தான் அஞ்சுநாலில்
குடுத்திட்டேன்குழவிக்கு வித்தைபுத்தி
குவலயத்தில்பேர்விளங்கோன் படைக்கிஆட்சி
படித்திட்டேன்போகருட கடாக்ஷத்தாலே
பண்பாகபுலிப்பாணிநடித்திட்டேனே. (களச)

நடித்திட்டேனின்னமொன்று நாட்டக்கேளு
நரக்குருவும்அசுரகுரு அணலன்பின்னுல்
படித்திட்டேன்பலகவியும் நூல்கள்கற்போன்
பலமானவித்தையென்று புவியில்வாழ்வன்
இடித்திட்டேன்யெட்டுபத்து யெட்டுஆண்டில்
ஈசன்லபிமுடியுமடா சிசுவுக்கேதான்

குடுத்திட்டேன்குளவிக்கி பாலையோகம்
குணமாகபுலிப்பாணி அறைந்திட்டேனே (களரு)

கிரகநாடி.

பாரப்பாஇன்னமொரு விவரங்கேளு
பகர்புதனுங்குருசனியும் வாதநாடி
சிரப்பாதுர்க்கிரகம் சூரிசேயும்
சிரப்பானபாம்புகளும்பித்தநாடி
நேரப்பாபால்மதியும் சுங்கன்தானும்
நேர்மையுள்ளசிலேட்டுமத்தின் கிரகமென்று
வீரப்பாபோகருட கடாக்ஷத்தாலே
விவரமெலாம்புலிப்பாணி விளம்பக்கேளு, (களசு)

கேளப்பாபண்டிதனே குறிப்புசொல்வேன்
கெவுனகுளிசித்தர்களும் பிரித்துசொல்லார்
ஆளப்பாஅம்புவியில் பிறந்தோர்க்கெல்லாம்
அவரவர்கள்ஜெனித்த ஜாதகத்தைப்பார்த்து
நாளப்பாதிசைபார்த்து ஊணும்பார்த்து
நடந்திடுமெக்காலத்தின் சித்திரமும்பார்த்து
கோளப்பாகிரகத்தின் நாடிக்கேத்த
கொடுத்திடுவாய்பிணிமருந்து குறித்திட்டேனே. (களஎ)

குறித்திட்டேனட்டமத்தின் செயலேயானுல்
கொடும்பித்தநாடியதின் பிணியுமானுல்
மரித்திட்டேபோகுமடா மருந்துவேண்டாம்
மற்றுமுள்ளசஷ்டமத்திற்கு அய்யம்
சிரித்திட்டேன்வியத்தானம் தனக்குவாதம்
சிறப்பாகநடக்காமல் மாறுமானுல்
தரித்திட்டேன்மருந்துதனை யீவாயென்று
தயவுடனேபுலிப்பாணி சாற்றினேனே. (களஅ)

சாற்றினேன்கும்பத்தில் பிறந்தோன்ஞானி
சார்வானதுலையதுவும் சாஸ்திரவல்லோன்
போற்றினேன்புதனதுவும் கேந்திரகோணம்
பொல்லாதசனியனுமே துலங்கவேண்டும்
தூற்றினேன்கலைமதியும் லெக்கினகேந்திரம்
சொற்பெரியநரகுருவும் வாக்கில்நின்றுல்

சாற்றினேன்பண்டிதனும் போகர்நூலால்
சார்வான்புலிப்பாணி சாற்றக்கேளு. (கஎகூ)

பாக்கியத்தில்வீரியத்தோ னிருக்கத்தன்னை
பகரவேவெள்ளிகுரு பார்க்கநிற்க
யோக்கியமுடன்சிவதலத்தில் ஞானியாகி
யுலகுமெய்க்கமடாதிபதியா யிருப்பானென்று
தீர்க்கமுடனவனிதனி லறியவேண்டி
செப்பினேமிதையறிந்து செகத்தில்யார்க்கும்
ஆக்கமுடன்போகருட கடாக்ஷத்தாலே
யவனிதனில்புலிப்பாணி யரைந்திட்டேனே. (கஅ0)

உட்லுயிற்குமூன்றுமிடத் ததிபன்மந்தன்
உடன்கூடியொருராசி நின்றாராகில்
திடமுடனேயவர்திசைகள் பொசிப்பில்நஞ்சு
தின்றதினலவனுயிர்க்குச் சேதமாகும்
படமுடையராகுடனே யிவர்கள்கூடிற்
பாசத்தாலிவனுயிரை மாய்த்துக்கொள்வான்
அடவுடனேபோகருட கடாக்ஷத்தாலே
அரியநூல்புலிப்பாணி அசைத்திட்டேனே. (கஅக)

பாரப்பாவீரியத்தோன் குருவும்லக்கினத்திலேறில்
பண்புடனேமிருகத்தால் பாவர்திசைதுன்பமாகும்
சேரப்பாவட்டமத்தோ னிவர்களோடே
சேர்ந்தாறுமிடந்தனிலே நிற்பாராகில்
கூரப்பாசண்டைபல கருவியாலே
கொடுந்துன்பம் ஜென்மனுக்கு வாதையாகும்
நேரப்பாயெனதுகுரு கடாக்ஷத்தாலே
நேர்மையுடன்புலிப்பாணி நிகழ்த்தினேனே. (கஅஉ)

தானனையின்னமொரு சேதிகேளு
தன்மையுடன்சந்திரனு லதிபனெட்டில்
வீணனதீக்கோட்கள் பலருங்கூடி
விரும்பிசட்டாட்டமதி லிருந்தாராகில்
கோனன அசீரணத்தா லிறப்பதல்லால்
கொடுமருந்துாடுபயம் சோற்றுலச்சம்
தேனனபோகாது தாள்வணங்கி
தெரிந்தசிறுபுலிப்பாணி பாடினேனே. (கஅங)

பாடினேனின்னமொன்று ஆறேனேடே
பகர்லெக்கினசாமியவன் சேர்ந்துவாழ
கூடினேன்கரும்பாம்பும் குலவிநிற்க
கொடுமருந்தால்சாவுவரும் கொடுத்திடாதே
தேடினேன்சனியொருகோள் சேர்ந்தானாகில்
தேடிவரும்ஜலகண்ட நிறியானந்தான்
நாடினேன்நவக்கிரக சாரங்கண்டு
நன்மையுடன்புலிப்பாணி நூலைப்பாரே. (கஅச)

பாரப்பாயின்னமொரு செயலைக்கேளு
பால்மதியைப்பெரியோர்கள் நீசம்பெற்று
கூரப்பாகொடுங்கண்ணால் நோக்கினாலும்
குவலயத்தில்செடிமறைவில் ஜெனித்தபிள்ளை
ஆரப்பாஅசுபர்களும் நீசம்பெற்று
அம்புலியை அரைக்கண்ணால் நோக்கினாலும்
நீரப்பாநீச்சன்வீடு வாசல்திண்ணை
நிலவரமாய்பெற்றெடுத்த சிசுதான்சொல்லே. (கஅரு)

புதன் நிலமை.

சொல்லுகிறேன் இருமூன்று ஈராரெட்டும்
சுகமில்லைஜென்மனுக்கு குய்யரோகம்
சொல்லுகிறேன்செம்பொன்னும் கணைக்கால்துன்பம்
சுற்றத்தார்மனமுறிவர் அரிட்டஞ்செப்பு
சொல்லுகிறேன்கேந்திரமும கோணம்நன்று
சுகமாகவாழ்ந்திருப்பன் காடியுள்ளோன்
சொல்லுகிறேன்சுயகவிதை மாமன்விருத்தி
சொர்ணநிலமுள்ளவனு மாலுகூரே. (கஅசு)

குரு- கோசரபலன்-ஜென்மத்தில்.

பாரப்பா இன்னமொன்று பகரக்கேளு
பரமகுருஜென்மத்தில் வந்தபோது
கூரப்பாகோதண்ட பாணிவீரன்
கொற்றவனே குடியேறிப்போகச்செய்தார்
சீரப்பாஜென்மனுக்கு வேதைமெத்த
சிவசிவாசெம்பொன்னும் நஷ்டமாகும்
வீரப்பாவேந்தனுட தோஷமுண்டு
விளம்பினேன்கோட்ச்சார வினையைக்கேளே. (கஅஎ

குரு-மூன்றில்

கேளப்பா குருபதியும் மூன்றிலேரக்
 கெடுதிமெத்தசெய்வனடா வேந்தன்தானும்
ஆளப்பா அகத்திலே களவும்போரும்
 அப்பனே அரிட்டமடா சிசுவுக்கேதான்
கூளப்பாகுவலயங்க ளெல்லாமாண்ட
 குற்றமிலாகாந்தாரி மகனுந்தானும்
வீளப்பாவீமன்கை கெதையினாலே
 விழுந்தானேமலைபோலேசாய்ந்தான்சொல்லே. (கஅஅ)

ஷ-கூ-ல்.

பாரப்பாபரமகுரு ஆரிலேர
 பலமுள்ளமாபெலி சக்கிரவர்த்தி
சீரப்பாசிறைகூடம் சென்றாரப்பா
 சிவசிவாதேவர்கள்தன் கொடுமையாலே
ஈரப்பா இராஜபயம் கலகம்துன்பம்
 இல்லரத்தில்களவுபோம் கிலேசம்மெத்த
வீரப்பாவெகுபயமாம் சர்ப்பதோஷம்
 வேந்தநின்றபதியறிந்து வினையைமூட்டே. (கஅகூ)

ஷ-ச-ல்

சொல்லப்பாசூதாட்டம் கொடியதப்பா
 சுகமுள்ளபஞ்சவர்கள் வினையினாலே
அல்லப்பா அகிலங்கள் யெல்லாம்தோற்று
 அப்பனே ஆரணியம் சென்றாரைவர்
நல்லப்பாநாலதனில் குரவுமேர
 நரச்சுகமுங்கிட்டாது நலிவுமுண்டு
மல்லப்பாமண்ணாலும் பொன்னால்வேதை
 மகத்தானகுருபதியின் கடாட்சத்தாலே (ககூய)

ஷ அ-ல்.

மூட்டப்பா இன்னமொரு மொழியைக்கேளு
 மூர்க்கமுள்ளவாலியுமோ சத்துருபங்கன்
கூட்டப்பாகோதண்ட பாணிஅம்பால்
 கொற்றவனேமலைபோலே சாய்ந்தான்காணே
நாட்டப்பாஜென்மனுக்கு நமனால்கண்டம்
 நலந்தப்பும்பொருள்சேதம் அரசர்தோஷம்
வீட்டப்பாவேதியனும் மதிக்கியெட்டில்
 விளங்கவேவெகுபயமா விளைவுபோமே. (ககூக)

ஷ-ய-ல் வந்தபலன்.

போமப்பாயின்னமொரு புதுமைகேளு
 பொன்னுமேபால்மதிக்கி பத்திலேர
ஆமப்பா ஆதிசிவன் தெருவுந்தோறும்
 அரகரா அய்யமெடுத் துண்ணாரப்பா
ஊமப்பாஉத்தமனா யிருந்தபுரூரன்
 உள்ளபடியறுப்புண்டான் வினையினாலே
வேமப்பாவேந்தனுட ராசிகூர்ந்து
 விளம்புவாய்புவியோர்க்கு வினையைத்தானே. (ககூஉ)

ஷ யஉ-ல் வந்தபலன்.

தானென்றசுந்திரனும் வியத்திலேற
 தவத்தாலேவந்ததொரு இலங்கைவேந்தன்
கோனென்றஇராமன்கை அம்பால்மாண்டான்
 குவலயத்தில்சென்மனுக்கு கொடுமைமெத்த
மானென்றமரலிபயம் பொருளுஞ்சேதம்
 மைந்தனே அரிட்டங்கள் வந்துகூடும்
ஊனென்றபோகருட கடாட்சத்தாலே
 உத்தமனேபுலிப்பாணி உரைத்தேன்காணே. (ககூங)

நீசபங்க ராஜயோகம்

சூடப்பா இன்னமொரு சூட்சங்கேளு
 சுகமுள்ளஜென்மனுட ராசிதன்னில்
மாடப்பாமதிமயங்கி ஒளியில்லாமல்
 மகத்தானகோளதுதா னீசமேர
கூடப்பாகுடிநாத னம்புலிக்கி
 கொற்றவனேகேந்திரமு மூச்சமாக
நாடப்பாபோகருட கடாக்ஷத்தாலே
 நலமாகசெப்பிடுவாய் நீசம்போச்சே. (ககூச)

இதுவுமது.

போச்சப்பா இன்னமொரு பேச்சுகேளு
 புகழ்பெரியநீசபங்க ராசயோகம்
நீச்சப்பாநிலத்தில் ஜென்மனுக்கு
 நிகழ்த்திவிட்டோம்நிலைசமய மறிந்துசெப்பு

கூச்சப்பாகுடியோர்கள் கண்ணுற்றாலும்
குற்றம்வந்துதீருமடா குழவிக்கேதான்
வீச்சப்பாபோகருட கருணையாலே
விளம்பினேன்புலிப்பாணி வினையைக்கேளே. (௧௬௫)

திசாபுத்திபலன்.

இணங்கினேனின்னமொன்று யியம்பக்கேளு
இரவிமுதலொன்பதுகோள் திசையில்தானும்
சுணங்கினேன்சுயபுத்தியில்பலனைத்தாரார்
சுகமளிப்பர்இருநால்வர் பேர்களுந்தான்
அணங்கினேன்அவரவர்கள் சமையங்கூர்ந்து
அப்பனேசுவாமியிட செயலைப்பாரு
குணங்கினேன்போகருட கடாக்ஷத்தாலே
குற்றமிலைப்புலிப்பாணி கூறினேனே. (௧௬௬)

சூரியதிசை.

கூரப்பாகதிருக்கு வருஷம்ஆறு
குணமுள்ளசுயபுத்திநாள் நூற்றெட்டாகும்
பாரப்பா அக்கினியால் பீடையுண்டு
பாங்கானஅபமிருத்துப் பொருளுஞ்சேதம்
ஆரப்பா அரிவார்கள் பிதாமிருத்தியு
அரிதானவாணிபஞ்செ யாகாதுநஷ்டம்
கோளப்பாகண்ணோவாங் கனலேமீரும்
கொடுமையுள்ளநாளென்று கூறினோமே, (௧௬௭)

சூரியதிசைசந்திரபுத்தி.

கூறினோம்ரவிதிசையில் சந்திரபுத்தி
குணமானமாதமது ஆறதாகும்
தேரினோம்அதன்பலனை செப்பக்கேளு
தீங்கில்லாதனலாபம் சம்பத்துண்டாம்'
ஆரினோம்வந்தபிணி தீரும்ரோகம்
அரசரால்மகிழ்ச்சியது தானுண்டாகும்
தேரினோம்ரவிசந்திரன் பொசித்தநாளில்
தீங்கிலாநாளென்று தெளிந்துகாணே (௧௬௮)

சூரியதிசை செவ்வாய்புத்தி.

காணவேரவிதிசையில் செவ்வாய்புத்தி
கனதையுள்ளகாளதுவும் நூற்றிருபத்தாறும்

தோணவே அதின்பலனைச் சொல்லக்கேளு
சொல்பெரியபூமிதனம் செல்வமாடும்
நாணவேநடைகாலி நன்றாய்ச்சேரும்
நன்மையுடநவதானியம் விளைவுமாகும்
பூணவேபூபாலன் செவ்வாய்தானும்
புகழ்ந்துமனைவீடகத்தில் வாழலாமே (௧௬௯)

சூரியதிசை ராகுபுத்தி.

ஆமென்றரவிதிசையில் ராகுபுத்தி
ஆகாதமாதம்பத்து நாள்மூவெட்டாகும்
போமென்றஅதின்பலனை புகழக்கேளு
பொன்னோடுபெண்ணதுவும் நாசமாகும்
காமென்றசத்துருவால் சண்டையுண்டாம்
நலமில்லாவியாதியது பீடிப்பாகும்
தாமென்றமனைவியரை பிரித்துவைக்கும்
தகமையில்லாநாளென்று தணிந்துநில்லே. (௨௱)

சூரியதிசை குருபுத்தி.

நில்லென்றரவிதிசையில் வியாழன்புத்தி
நேர்மையுள்ளநாளதுவும் யெரணூத்தியெண்பத்தெட்டு
வில்லென்றஅதின்பலனை விரித்துசொல்வோம்
விவரமாய்சம்பத்தும் தனதானியமுண்டாம்
சொல்லொன்றும்தவறாத வினையகலும்பாரு
சொல்லப்பாநாள்யின்பவெய்து வாழலாகும்
புல்லென்றபுத்திரனும் ஆகும்பாரு
பொல்லாதசத்துருவும் வணங்குந்தானே. (௨௦௧)

சூரியதிசை சனிபுத்தி.

வணங்குவார்ரவிதிசையில் சனிபுத்திகேளு
வாக்கிலாநாளதுவும் மாதம்பதினொன்று
இணங்குவார்நாளதுவும் முன்னூன்காகும்
இதினுடையபலத்தையினி யியமபக்கேளு
குணங்குவார்சத்துருவும் மன்னவருந்தானும்
குலைபொருளுஞ்சேதமே ஆக்கிவைப்பார்
பிணங்குவார்பிதிரும்மா ரகமேயாவர்
பிலன்கெடுபண்ணிவைப்பான் சனியன்தானே. (௨௦௨)

சூரியதிசை புதன்புத்தி,

தானென்றரவிதிசையில் புதனார்புத்தி
சாதகமாம்மாதம்பத்து நாளாறுகும்

ஆனென்றஅதின்பலனை அரையக்கேளு
அடங்காதவியாதிவந்து பின்னிக்கொல்லும்
வானென்றவான்பொருளுஞ் சேதமாகும்
வாகுடையபுத்திமதி நாசமாகும்
கேனென்றகுடிகேடு பண்ணிவைக்கும்
கொடுமையுள்ளநால்தனிலே குடிகேடாமே (௨௦௩)

சூரியதிசை கேதுபுத்தி.

ஆமென்றரவிதிசையில் கேதுபுத்தி
ஆகாதநாளதுவும் நூத்திருபத்தாறு
போமென்றஅதின்பலனை புகலக்கேளு
பொருந்துகின்றகாரியங்கள் சேதமாகும்
நாமென்றமனைவிதன்னை நாசம்பண்ணும்
நலமில்லாசத்துருவும் நல்குவான்பார்
தாமென்றஇருந்தவிடம் விட்டேகிவைக்கும்
தரணிதனில்தெண்டம்வரும் சார்ந்துகேளே. (௨௦௪)

சூரியதிசை சுக்கிரபுத்தி.

கேளப்பாரவிதிசையில் சுக்கிரபுத்தி
கெணிதமுள்ளமாதமது பனிரெண்டாகும்
ஆளப்பாஅதின்பலனை அரையக்கேளு
ஆகாதசூரியுடன் சூஸ்திரவாய்வு
பாளப்பாஆகுமடா திரேகந்தன்னை
பகையதுவுமுண்டாகும் பலனேயில்லை
வாளப்பாமனையாட்டி சிலுக்குண்டாகும்
வகையுடனேவான்பொருளும் கேடாம்சொல்லே. (௨௦௫)

சந்திரதிசை.

சொல்லவேசந்திரதிசை வருஷம்பத்தில்
சுகமுடையசந்திரபுத்தி மாதம்பத்து
நில்லவேயதினுடைய பலனைச்சொல்வோம்
நிகரில்லாமன்னருடன் மகிட்சியாகும்
சொல்லவேசுயமரங்கள் நாட்டிவைத்து
சுகமானகல்யாணம் ஆகும்பாரு
வெல்லவேசத்துருவை ஜெயிக்கலாகும்
வேணபடிநிதிசேரும் விபரந்தானே. (௨௦௬)

சந்திரதிசை-செவ்வாய்புத்தி.

தானென்றசந்திரதிசை செவ்வாய்புத்தி
தன்மையில்லாநாளதுவும் மாதம்ஏழு
வானென்றஅதின்பலனைச் சொல்லக்கேளு
வாதமுடன்கிரந்திபித்தம் வாய்வுரோகம்
யேனென்றகள்ளரால் சோபமுண்டாம்
யெளிதானயேந்திழையால் துக்கமுண்டாம்
கோனென்றகோதையரும் சகோதரத்தால்
கொடுமைகளுமுண்டாகும் கூர்ந்துபாரே. (௨௦௭)

சந்திரதிசை-ராகுபுத்தி.

பாரப்பாசந்திரதிசை ராகுபுத்தி
பகையானநாளதுவும் மாதம்பதினெட்டாகும்
ஆரப்பாஅதினுடைய பலத்தைக்கேளு
அடங்காதசத்துருவால் தனநஷ்டமாகும்
வீரப்பாவியாதியது பீடிப்பாகும்
விதியளவும்புத்திமதி நாசம்பண்ணும்
காறப்பாகளருடனே காலிசாவாம்
கனகமதுசிலவாகும் கண்டுதேரே. (௨௦௮)

சந்திரதிசை-குருபுத்தி.

தேரவேசந்திரதிசை வியாழபுத்தி
தீங்கில்லாமாதமது பதினாறுகும்
கூரவேயிருந்தபலன் தன்னைக்கேளு
குணமுடையமாதர்களும் சோபனமேயுண்டாம்
சேரவேசெட்டுடனே லாபமுண்டாம்
சென்னல்முதல்விளைவாகுஞ் செல்வஞ்சேரும்
வீரவேவியாதியது நிவிர்த்தியாகும்
வீரானமணியமுடன் வினையகலும்பாரே. (௨௦௯)

சந்திரதிசை-சனிபுத்தி.

பாரப்பாசந்திரதிசை சனியன்புத்தி
பகர்ந்தநாள்மாதமது பத்தொன்பதாகும்
நேரப்பாஅதினுடைய பலத்தைச்சொல்வோம்
நேரிழையாள்மரணமதாம் நெஞ்சுதனில்நோவாம்
காரப்பாகனகமது சிலவேயாகும்
கள்ளரால்சோரர்பயம் துக்கமுண்டாம்

சாரப்பாசத்துருவால் இடஞ்சலுண்டாம்
சஞ்சலங்களுண்டாகும் தவமேபாழாம். (௨௪௦)

சந்திரதிசை-புதன்புத்தி.

பாளில்லாசந்திரதிசை புதனும்புத்தி
பகரும்நாள்மாதமது பதினேழாமே
கோளில்லா அதின்பலத்தை கூர்ந்துசொல்வோம்
குணமுள்ளமாதர்களும் மனமகிட்சியுண்டாம்
நாளில்லாகலியாணம் நடக்கும்பாரு
நன்றானபாக்கியமும் நவதானியஞ்சேரும்
தேளில்லாசத்துருவை செயிக்கலாகும்
தெரிவையர்கள்மோகமுடன் தெளிந்துநிற்பான். (௨௪௧)

சந்திரதிசை-கேதுபுத்தி.

தெரிந்துநின்றசந்திரதிசை கேதுபுத்தி
தென்மையில்லாநாளதுவும் மாதம்ஏழு
புரிந்துகொண்ட அதின்பலனைப் புகழக்கேளு
புகழ்பெத்தமார்பில்சில பிணியுமுண்டாம்
பரிந்துகொண்டபாவையரும் பகைநாசமுண்டாம்
பாங்கானதாய்தந்தை சுதன்மரணமாகும்
விரிந்துகொண்டவியாதியது விழலாய்பண்ணும்
வீணுகதேசமெங்கும் அலைவன்பாரே. (௨௪௨)

சந்திரதிசை-சுக்கிரபுத்தி.

கேளப்பாசந்திரதிசை சுக்கிரபுத்தி
கெணிதமுள்ளநாளதுவு மாதம்நாலெட்டு
ஆளப்பா அதின்பலனை சொல்லக்கேளு
அன்பானலெட்சுமியு மனுதினமுநிற்பாள்
வாளப்பாவாகனமும் பொன்முத்துசேரும்
வகையானபூஷணமும் மிகுதியுண்டாம்
கேளப்பாகலியாணங் கெணிதமுடன்நடக்குங்
கெந்தமுடன்சுகந்தங்கள் அணிவான்பாரே. (௨௪௩)

சந்திரதிசை-சூரியபுத்தி.

மானேகேள்சந்திரதிசை சூரியபுத்தி
மரணநாள்மாதமது ஆறதாகும்
தானேதான்சத்துருவும் அக்கினியின்பயமும்
தாபமுள்ளசுரதோஷம் சன்னிதோஷம்

யேனேதான்காணுமடா யிருக்கமதுவுண்டாம்
யேகாந்ததேகமது இருளதுவேயடையும்
தேனேகேள்லெட்சுமியும் தேகமுடன்போவள்
திரவியங்கள்சேதமடா சிலவுடனேதீதாம் (௨௪௪)

செவ்வாய்மகாதிசைசுயபுத்தி.

ஆமென்றசெய்திசை வருஷம்ஏழில்
அங்காரகன்புத்திநாள் நாத்திரறபத்திஏழு
போமென்ற அதின்பலனை புகழக்கேளு
புகழானஅரசர்பகை ஆயுதத்தால்பீடை
தாமென்றசத்துருவால் வியாதியதுகாணும்
தனச்சேதம்உடல்சேதம் தானேஉண்டாம்
காமென்றநகரத்தில் சூனியங்களுண்டாம்
நாடெலாம்தீதாகும் நன்மையில்லாப்பகையே. (௨௪௫)

செவ்வாய்திசை-ராகுபுத்தி

பகையானசெய்திசை ராகுபுத்தி
பாங்கில்லாநாளதுவும் வருஷம்மூன்று
துகையில்லாநாளதுவும் பதினெட்டாகும்
துன்பங்கள்சுரதோஷம் வாதபீடை
வகையில்லாசத்துருவும் அக்கினியுமுண்டாம்
வளங்கொடியாள்விரோதமது வகையுடனேகாட்டும்
நகையுடனேபூஷணங்கள் நலமில்லாசிலவாம்
நன்மையில்லாசிலைவிட்டு நடப்பான்காணே. (௨௪௬)

செவ்வாய்திசை-குருபுத்தி.

காணவேசெய்திசை வியாழபுத்தி
கனமானநாளதுவு மாதம்பதினொன்று
நாணவேநாளதும் ஆறதாகும்
நன்றாக அதின்பலனை நவிலக்கேளு
பூணவேபூவையரும் பொருந்திருப்பாள்
புகழானசிலவுடனே சிறப்புண்டாகும்
தோணவேசத்துருவும் வணக்கமாவான்
தொடுத்ததொருகாரியங்கள் வெற்றியாமே. (௨௪௭)

செவ்வாய்திசை-சனிபுத்தி.

வெற்றியில்லாசெய்திசை சனியன்புத்தி
வீரானநாளதும் மாதம்பதிமூன்று

சத்தியில்லாநாளதுவும் ஒன்பதாகும்
சுகமில்லே அதின்பலனை சூட்டக்கேளு
புத்தியில்லாசத்துருவும் ரோகபயமுண்டாம்
பூவையரும்புத்திரரும் புனிதமுடன்மடிவாம்
கெதியில்லா கரக்கங்கள் மெத்த உண்டுபாரு
கனதையுள்ளசூனியமும் கினவுடனேகாணும். (௨௧௮)

செவ்வாய்திசை-புதன்புத்தி.

காணவேசெய்திசையில் புதனர்புத்தி
கணக்கானநாளதுவும் மாதம்பதினொன்று
பூணவேநாளதுவும் மூன்ஒன்பதாகும்
பூட்டானஅதின்பலனைபுகழக்கேளு
பேணவேஒழுமுடிந்த பிரமியமும்
பெரிதாணரீரழிவும் பிலன்கேடுபண்ணும்
தோணவேதோகையரும் வியாதியாவாள்
தொடுத்ததொருகாரியங்கள் பொல்லாப்பாமே, (௨௧௯)

செவ்வாய்திசை-கேதுபுத்தி.

ஆகுமேசெவ்வாயில் கேதுபுத்தி
ஆகாதநாளதுவும் நூத்திருபத்தியேழு
போதவேபலனதனை பூட்டக்கேளு
பூவையரும்புத்திரரும் வியாதியாகும்
யேதுமேவியாதியது கூடிக்கொல்லும்
யின்பமுள்ளயினவிரோதம் தானுமுண்டாம்
சாகுமேசத்துருவும் பிசாசுதானும்
சஞ்சலங்களதினலே கோடிதானே. (௨௨௦)

செவ்வாய்திசை-சுக்கிரபுத்தி.

தானென்றசெய்திசையில் சுக்கிரன்புத்தி
தாழ்வானமாதமது பதினலாகும்
வீனென்றஅதின்பலனை வினவக்கேளு
விரசாவுசத்துருவால் விலங்குமுண்டாம்
யேனென்றயீனஸ்திரீ போகமுண்டாம்
யின்பமில்லா துன்பமது யிடஞ்சல்காட்டும்
கோனென்றஇராசாவால் கலகமுண்டு
கோதண்டம்தான்வருகும் கொடுமைபாரே. (௨௨௧)

செவ்வாய்திசை-சூரியபுத்தி

பாரப்பாசெவ்வாயில் சூரியபுத்தி
பாங்கானநாளதுவும் நூற்றிருபத்தியாறு

ஆரப்பா அதின்பலனை யரையக்கேளு
ஆனதொருசம்பத்து அயிஸ்வரியமுண்டாம்
சாரப்பாசத்துருவும் முரவாகிப்போவான்
சஞ்சலங்கள்தானகலும் சம்பத்துண்டாம்
சேரப்பாசிவதலங்கள் சேரபண்ணும்
தீங்கில்லாசிவவேடம் பூணுவானே. (௨௨௨)

செவ்வாய்திசை-சந்திரபுத்தி.

பூணுவான்செவ்வாயில் சந்திரபுத்தி
புகழானநாளதுவும் மாதம்யேழு
ஆணுவான் அதின்பலனை அன்பாய்கேளு
ஆயிழையாளருகிருந்து செல்வபதியாவாள்
கோணுவான்கொடியோர்கள் வணக்கஞ்செய்வார்
கொற்றவனேகுவலயத்தில் பேர்விளங்கும்
ஊணுவான்தோகையரும் புத்திரருமுண்டாம்
உத்ததொருகுலதெய்யவம்உறுதிகாணே. (௨௨௩)

இராகுமகாதிசை-சுயபுத்தி.

காணவோர்குதிசை வருஷம்பதினெட்டு
கனதையுள்ளராகுவினில் ருகுபுத்தி
தோணவேமாதமது முப்பத்திரெண்டு
துகையானநாளதுவும் பனிரெண்டாகும்
யேனவேசத்துருவால் நிவந்தனையோடும்
யெண்ணமுள்ளமனைவியரும் யிருந்தவிடம்பாளாம்
போனவேபழம்பொருளும் சேதமாகும்
பெலமானநோயதுவும் கூடிக்கொல்லும். (௨௨௪)

இராகுதிசை-குருபுத்தி.

கூடியேருகுதிசை வியாழபுத்தி
குணமுள்ளமாதமது யிருபத்தெட்டும்
நாடியேநாளதுவும் மூவெட்டாகும்
நலமுள்ளராசரால் நன்மையுடன்வாழ்வன்
தேடியேதெரிவையரும் சோபனமேயாகும்
தெகுட்டாதபுத்திரனும் தென்புடனேவாழ்வன்
பாடியேபாக்கியமும் பவுசுகளுண்டாம்
பலன்தரும்பூமிமுதல்போகந்தானே. (௨௨௫)

இராகுதிசை-சனிபுத்தி.

தானென்றாகுதிசை சனிபுத்திகேளு
  தன்மையில்லாமாதமது முப்பத்திறலு
நானென்றநாளதுவும் ஆறதாகும்
  நலமில்லாபிரமைகொண்டு நாடுநகர்திரிவன்
கோனென்றபிதிர்பீடை யுண்டாகும்பாரு
  கொடியிடைவாள்நோவாகும் குழந்தையதுசாவாம்
தேனென்றதேவதையின் இடஞ்சலுண்டாம்
  தெண்டமுடன்சத்துருவும் திரவியங்கள்சேரும். (௨௨௬)

இராகுதிசை-புதன்புத்தி.

சேதமில்லாராகுதிசை புதனார்புத்தி
  செப்புநாள்மாதமது முப்பதாகும்
பாதமில்லாநாளதுதான் பதினெட்டாகும்
  பகுத்தரியும்அதின்பலனை பகரக்கேளு
வாதமில்லாவாணிபஞ் செட்டாகும்பாரு
  வகையானசகோதர முடன்வாழலாகும்
பேதமுடன்பொருளுண்டாம் பூமிலாபம்
  பொங்குமால்புத்திரனில் புகழ்ரொம்பபாரே. (௨௨௭)

ராகுதிசை-கேதுபுத்தி.

பாரேநீராகுதிசை கேதுபுத்தி
  பகருகின்றமாதமது பனிரெண்டாகும்
சேரேநீநாளதுவும் பதினெட்டாகும்
  செலுத்துகின்றஅதின்பலனை செப்பக்கேளு
ஊரேநீவிரோதமுடன் சத்துருவுமுண்டாம்
  உடன்கேடுபண்ணிவைக்கும் உண்மைபாரு
தேரேநீதிரவியங்கள் யேவலுடன்சேதம்
  தீதானகாரியங்கள் தேகத்தில்காணும். (௨௨௮)

ராகுதிசை-சுக்கிரபுத்தி.

காணவேராகுதிசை சுக்கிரபுத்தி
  கணக்கானமாதமது ஆறாறாகும்
தோணவேஅதின்பலனை சொல்லக்கேளு
  தோகையர்கள்தன்னாலே சுகமாகும்பாரு
பூணவேபூமிமுதல் பொருளுஞ்சேரும்
  புகழ்பெற்றஅரசரால் சந்தோஷமாகும்
ஊணவேவியாதியது பீடிப்பாகும்
  உடன்கேடுவேந்தனால் கலகமாமே. (௨௨௯)

ராகுதிசை-சூரியபுத்தி

ஆகுமேராகுதிசை சூரியபுத்தி
  அருளில்லாமாதமது பத்தேயாகும்
யேகுமேநாளதுவும் மூவெட்டாகும்
  யென்னசொல்வேனதின்பலனை யியம்பக்கேளு
போகுமேசத்துருவால் வியாதிகாணும்
  பொருள்சிலவுபூமிமுதல் சேதமாகும்
சாகுமேநாள்தோறும் சண்டையாலே
  சதிரானபூமிமுதல்காவிபோமே, (௨௩௰)

ராகுதிசை-சந்திரபுத்தி.

காவியென்றாகுதிசை சந்திரபுத்தி
  கனமில்லாமாதமது ஈரொன்பதாகும்
வேவியென்றஅதின்பலனை விளம்பக்கேளு
  விதமில்லாமனைவிதன்னால் பொருளுஞ்சேதம்
வாவியென்றகுரங்கதுபோல் மாண்டுபோவான்
  வகையானதேசம்விட்டு அலைவன்பாரு
மாவியென்றமனைவியால் சுகபோகமில்லை
  மக்கள்முதல்மாடுடன் கேடாங்கேளே. (௨௩௧)

ராகுதிசை-செவ்வாய்புத்தி.

கேளப்பாராகுதிசை செவ்வாய்புத்தி
  கேடானநாளதுவும் வருஷம்ஒன்று
நாளப்பாநாளதுவும் பதினெட்டாகும்
  நன்மையில்லா அதின்பலனைநவிலக்கேளு
ஆளப்பா அக்கினியும் சோரபயமுண்டாம்
  அடிபணியும்தேவதையால் அவதியுண்டாம்
பாளப்பாபாவையரும் பலனுந்தீதாம்
  பாழாகும்பொருள்சிலவும் பலவிதமுந்தானே, (௨௩௨)

வியாழமகாதிசை-சுயபுத்திப்பலன்.

தானென்றவியாழதிசை ஒருபத்தாறு
  தன்மையுடனதின்புத்தி வருஷம்ரெண்டு
நானென்றநாளதுவும் நாற்பத்தெட்டு
  நன்றாகஅதின்பலனை நவிலக்கேளு
கோனென்றாசாவும் குருவருளுமுண்டு
  குறைவில்லாதிரவியங்கள் வெகுலாபமுண்டாம்

ஆனென்றபெண்கொடியாள் மனமகிட்சியுண்டாம்
மங்களமும்சோபனமும் வளருங்கலியாணம். (௨௩௩)

வியாழதிசை-சனிபுத்தி,

வளருமென்றவியாழதிசை சனியின்புத்தி
வாகானமாதமது முப்பதுவேயாகும்
வளருமென்றநாளதுவும் பனிரெண்டாகும்
வண்மையுடன் அதின்பலனை வழுத்தக்கேளு
வளருமென்றகெர்ப்பமுடன் போகம்சித்தி
வகையுடனேதிரவியமும் பூஷணமுஞ்சேரும்
வளருமென்றமன்னன்போல் வளருமதுயோகம்
வாகானதண்டிகையும் வாகனமுமுண்டாம். (௨௩௪)

வியாழ திசை-புதன்புத்தி.

உண்டாகும்வியாழதிசை புதனர்புத்தி
உண்மையுள்ளமாதமது யீரொன்பதாகும்
தென்றுநாளதுவு ஆரதாகும்
தெவிட்டாத அதின்பலனை தென்புடனேகேளு
உண்டாகுமலைபோலே பெருகுஞ்செல்வம்
குறைவில்லாமாதர்மைந்தர் கட்டுடனேவாழ்வன்
சென்றாகும்திருவுடனே பட்டங்கட்டும்
திருவானலெட்சுமியும் சேர்வள்பாரே. (௨௩௫)

வியாழ திசை-கேதுபுத்தி.

பாரப்பாவியாழதிசை கேதுபுத்தி
பாழாகும்மாதமது பதினென்றாகும்
சேரப்பாநாளதுவும் ஆறதாகும்
செம்மையில்லா அதின்பலனை செப்பக்கேளு
வீரப்பாவியாதியது கூடிக்கொல்லும்
விதமில்லாமனைவிதன்னால் நிலைவிட்டுப்போவான்
சாரப்பாசத்துருவும் சதஞ்செய்யவருவான்
சகலசனபாக்கியமும் க்ஷணத்தில்போமே. (௨௩௬)

வியாழதிசை-சுக்கிரபுத்தி.

போமென்றவியாழதிசை சுக்கிரபுத்தி
பொருள்காணுமாதமது முப்பத்திரண்டு
ஆமென்ற அதின்பலனைச் சொல்லக்கேளு
அருளானலெட்சுமியும் அன்புடனேசேர்வாள்

சுபமென்றசோபனமும் மனமகிழ்ச்சியுண்டாம்
சுகமானகன்னியுடன் சுகமுடனேவாழ்வன்
நாமென்றநாகரீகர் கைவசமேயாகும்
நன்றாகஅவனிதனில் நன்மையுடன்வாழ்வான். (௨௩௭)

வியாழதிசை-சூரியபுத்தி.

வாமென்றவியாழதிசை சூரியபுத்தி
வகையுடையமாதமது ஒன்பதாகும்
தாமென்றநாளதுவும் பதினெட்டாகும்
தன்மையுடன் அதின்பலனை சாற்றக்கேளு
பிரமென்றபரதேசி யாகிப்போவான்
பாங்கானமடபதியில் பரமகுருஆவான்
ஞானமென்றபதியில்நின்று யோகநிலையை
ஞாபகத்தில்சிவனடியை மறவான்காணே. (௨௩௮)

வியாழதிசை-சுக்கிரபுத்தி.

காணவேவியாழதிசை சுக்கிரபுத்தி
கனமுள்ளமாதமது பதினாறாகும்
தோணவே அதின்பலனை சொல்லக்கேளு
சுகமுடையகலியாணம் சோபனங்களுண்டாம்
பேணவேசிவிகைமுத்து வெண்குடையுமுண்டாம்
பெரிதானராசாவால் பெருஞ்செல்வமுண்டாம்
பூணவேதாய்தந்தை மனைவியுடன்புத்திரன்
புகழுடன்வாழ்ந்திருப்பன் பூலோகந்தன்னில். (௨௩௯)

வியாழதிசை-செவ்வாய்புத்தி.

தன்னிலேவியாழதிசை செவ்வாய்புத்தி
தன்மையில்லாமாதமது பதினொன்றாகும்
விண்ணிலேநாளதுவும் ஆறதாகும்
மாறானபலனதுவை விளம்பக்கேளு
புண்ணிலே அக்கினியால் வியாதிகாணும்
பூமியினால்விளைவுகுன்றும் மாடாடுசாகும்
விண்ணிலேபோனாலும் சத்துருவுண்டு
வீணனவிலங்கதுவும் விதிவசமேயாகும். (௨௪௦)

வியாழதிசை-ராகுபுத்தி.

ஆகுமேவியாழதிசை ராகுபுத்தி
அருளில்லாமாதமது யிருபத்தெட்டு

போகுமேநாளதுவு மூவெட்டாகும்
பொல்லாத அதின்பலனை புகழக்கேளு
வாகுமேவியாதியது பீடிப்பாகும்
மனைவியரும்புத்திரரும் மாண்டுபோகும்
யேகுமேசத்துருவும் இடஞ்சலுண்டாம்
இதங்கேடுபண்ணிவைக்கும் யிம்மையுடன்கேளே, (௨௪௧)

சனிமகாதிசைசுயபுத்திபலன்.

கேளப்பாசனிதிசையில் மார்க்கங்கேளு
கெடியானவருஷமது பத்தொன்பதாகும்
கேளப்பாசனிபுத்தி வருஷம்மூன்று
கேடானநாளதுவும் மூன்றதாகும்
பாளப்பாபாவையரும்பாலந்தானும்
பாங்கானவருஷம்ஒன்றில் சாவதாகும்
ஆளப்பா அலைச்சலது மெத்தவுண்டாம்
அளவில்லாதனச்சேத மாகுந்தானே (௨௪௨)

சனிதிசை-புதன்புத்தி.

தானென்றகாரிதிசை புதன்புத்திகேளு
தன்மையுள்ளமாதமது காளெட்டாகும்
நானென்றநாளதுவும் ஒன்பதாகும்
நன்றாகஅதின்பலனை நவிலக்கேளும்
மானென்றமன்னரால் மகிட்சியுண்டாம்
மாதர்முதல்பந்துக்களும் மகிட்சியாகும்
வானென்றஞானமுடன் யோகமார்க்கம்
வளர்கின்றகற்பமுதல் தேகசித்தியாமே. (௨௪௩)

சனிதிசை-கேதுபுத்தி.

ஆமென்றகாரிதிசை கேதுபுத்தி
அருளில்லாமாதமது பதின்மூன்றாகும்
போமென்றநாளதுவும் ஒன்பதாகும்
புகழில்லாஅதின்பலனை புகழக்கேளு
தாமென்றதலைவலியும் கண்ரோகமாகும்
தப்பாதுபாண்டுவுடன் தனப்பொருளுஞ்சேதம்
நாமென்றசத்துருவால் முத்தண்டமுண்டாம்
நன்மையுள்ளமாதரால் கெர்ப்பமதுபாழாம். (௨௪௪)

சனிதிசை-சுக்கிரபுத்தி.

பாலில்லாகாரிதிசை சுக்கிரபுத்தி
பாங்கானமாதமது முப்பத்தியெட்டு

நாளில்லாமங்கையரும் மனமகிட்சியாகும்
நன்றானபெருஞ்செல்வம் நாளதிலேயுண்டாம்
ஆளில்லா அரசனுடன் அனுதினமும்வாழ்வன்
ஆனைகட்டுவிரக்கமுடன் அலங்காரமுண்டாம்
கோளில்லாசத்துருநோய் யில்லையதுபாரு
கோகனகமாதுசெல்வம் கொடுப்பாள்தானே. (௨௪௫)

சனிதிசை-சூரியபுத்தி

தானென்றகாரிதிசை கதிரோன்புத்தி
தயவில்லாமாதமது பதினொன்றாகும்
நானென்றநாளதுவும் பனிரெண்டாகும்
நன்மையில்லா அதின்பலனை நவிலக்கேளு
ஊனென்றசுரபீடை ரெத்தமேறும்
உதிரத்தால்சூலைநோய் உடனேகாணும்
மானென்றமனைவியரும் மக்கள்தானும்
மயங்குகின்றநோவதினால் வருத்தங்காணே. (௨௪௬)

சனிதிசை-சந்திரபுத்தி.

காணவேகாரிதிசை சந்திரபுத்தி
கனமில்லாமாதமது பத்தொன்பதாகும்
தோணவே அதன்பலனை சொல்லக்கேளு
தோகையருஞ்சண்டையதால் துன்பம்வருங்கேடு
பூணவேபூமிமுதல்பூணாரங்கள்
புகன்றதொருதனமுதல் சேதமாகும்
ஆணவே அலைச்சலது உண்டாகும்பாரு
அளவில்லாபேயதுவுங்கூடிக்கொல்லும். (௨௪௭)

சனிதிசை-செவ்வாய்புத்தி.

கூடியேகாரிதிசை செவ்வாய்புத்தி
குணமில்லாமாதமது பதிமூன்றதாகும்
தேடியேநாளதுவும் ஒன்பதாகும்
சேதமுள்ள அதன்பலனைச் சொல்லக்கேளு
பாடியேபாவையரும் வகைநாசமாகும்
பண்புடனேசத்துருவும் தனச்சேதம்பண்ணும்
வாடியே அலைந்திடுவாய் தேசமெங்கும்
வாகானதேவதையால் பிசகுண்டாமே, (௨௪௮)

சனிதிசை-ராகுபுத்தி.

உண்டாகும்காரிதிசை ராகுபுத்தி
உறுதியில்லாமாதமது முப்பத்திநாலு

கொண்டாகும்நாளதுவும் ஆறதாகும்
  கொடுமையுள்ள அதின்பலனை குறித்துச்சொல்வோம்
விண்டானவியாதியுடன் வாந்திநாணும்
  விதமானசரீரமதில் மேகரணமுண்டாம்
துண்டாகும்சரீரமது யிருபிளவாய்போகும்
  துன்பமுள்ள நாளதனில்சாவும்ஆமே. (உசகூ)

சனிதிசை-குருபுத்தி.

சாவில்லாகாரிதிசை வியாழபுத்தி
  சமானமுள்ளமாதமது முப்பதாகும்
நாளில்லாநாளதுவும் பனிரெண்டாகும்
  நன்மையுள்ள அதன்பலனை நவிலுவோம்கேளு
மாயில்லாமங்கையரும் மணமுடனேவருவாள்
  மார்க்கமுள்ளபழம்பொருளும் வகையுடனேசேரும்
காயில்லாகனகமது கண்டெடுப்பான்பாரு
  கனதையுள்ளசத்துருவும் காலடியில்வீழ்வான். (உருO)

புதன்மகாதிசை சுயபுத்தி.

அடியில்நின்றபுதன்திசைதான் வருஷம்பதினேழு
  அதினுடையபுத்தியது மாதம்நாலேழ்
முடியில்நின்றநாளதுவும் மூவொன்பதாகும்
  மூர்க்கமுள்ள அதன்பலனைக் கூரக்கேளு
படியில்நின்றபழம்பொருளும் பாவையருஞ்சேருவள்
  பாங்கானசோபனமும் பாங்குடனேகாணும்
குடியில்நின்றகுலதெய்வங் குணமுடனேசேரும்
  குடும்பத்தில்புத்திரனுங் குணமுடனேவாழ்வான். (உருக)

புதன்திசை-கேதுபுத்தி.

வாளலாம்புதன்திசையில கேதுபுத்தி
  வகையில்லாமாதமது பதினொன்றாகும்
குள்ளலாம்நாளதுவும் யிருபத்தியேழு
  கொடுமையுள்ள அதின்பலனைக்கூறக்கேளு
மாளலாம்பகையரும் உத்தார்காசம்
  மணமில்லாவியாதியது மடிந்துக்கொல்லும்
தேடலாம்திரவியங்கள் சேதமாகும்
  தினந்தோறும்சத்துருவும் நீதான்பாரே. (உருஉ)

புதன்திசை-சுக்கிரபுத்தி.

[illegible]ரப்பாபுதன்திசையில் சுக்கிரபுத்தி
  பாங்குள்ளமாதமது முப்பத்திநலு

சேரப்பா அதின்பலனை செப்பக்கேளு
  தேவதையால்தர்க்கமது தீதாம்பாரு
ஆரப்பாமனைவியுடன் புத்திரனும்
  அனுதினமும்வாழ்ந்திருப்பன் அலங்காரமுடன்
காரப்பாகனகமது கனசம்பத்துண்டாம்
  கனமானராசாவால் கடாட்சமுண்டாங்கேளே. (உருங)

புதன்திசை-சூரியபுத்தி.

கேளப்பாபுதன்திசையில் சூரியபுத்தி
  கெணிதமுள்ளநாளதுவும் மாதம்பத்து
ஆளப்பா அதின்பலனை அரையக்கேளு
  ஆதிகுருதலஞ்சிவ பதங்களுண்டாம்
காணப்பாகாவியது வேஷ்டியுண்டு
  காசினியில்பரதேசி ஆகிப்போவான்
வாளப்பாமடபதியி லிருந்துக்கொண்டு
  மனையாட்டிதன்னுடனே வாழ்ந்திருப்பான்தானே. (உருச)

புதன்திசை-சந்திரபுத்தி.

தானே தான்புதன்திசையில் சந்திரபுத்தி
  தாழ்வானமாதமது பதினஞ்சாகும்
தேனென்ற அதின்பலனை சொல்லக்கேளு
  தெரிவையர்கள்கலகமுடன் யிளப்புசயரோகம்
கோனென்றராசாவால் குடிக்கேடுசெய்யும்
  கோதையர்கள்தன்னாலே குடிபாழாகும்
வானென்றவான்பொருளும் வகையில்லாச்சேதம்
  வையகத்தில்நீதியில்லா மாதரையுமசேர்த்திடுமே. (உருரு)

புதன்திசை-செவ்வாய்புத்தி.

சேரலாம்புதன்திசையில் செவ்வாய்புத்தி
  செயமில்லாமாதம் பதினொன்றாகும்
தேரலாம்நாளதுவும் மிருபத்தேழில்
  தெரிவையர்கள்தன்னாலே கிரந்தியதுநோவாம்
மாரலாம்சத்துருவால் மயக்கமுடன்பேயும்
  மனதானசகோதரமும் அதினால்சேதம்
பாரலாம்பலநிதியுங் கெடுதிகாணும்
  பணமுடையபூமிமுதல் பலனுந்தீதாம். (உருசு)

புதன்திசை-ராகுபுத்தி.

பலனில்லாபுதன்திசையில் ராகுபுத்தி
  பாழானமாதமது முப்பதாகும்

நலமில்லாநாளதுவும் பதினெட்டாகும்
நன்றாக அதின்பலனை நவிலக்கேளு
பலமில்லாபிணிகளுடன் மயக்கம்சேதம்
பிரட்டானசத்துருவால் பேதையர்கள்பாசம்
நலமில்லாவியாதியினால் நற்பொருளுஞ்சேதம்
நன்றானவீடுமுதல் பூமிநிதிபோமே. (௨௫௭)

புதன்திசை-குருபுத்தி.

போமென்றபுதன்திசையில் வியாழபுத்தி
புகழுள்ளமாதமது யிருபத்தேழு
நாமென்றநாளதுவும் ஆறதாகும்
நன்றாகவதின்பலனை நவிலக்கேளு
தாமென்றசத்துருநோய் பயமும்போகும்
சகலசம்பத்துடனே தரணில்வாழ்வன்
போமென்றயோகமது கைக்குள்சிக்கும்
யேகமாம்புத்திரனும் யிதிலுண்டாமே. (௨௫௮)

புதன்திசை-சனிபுத்தி.

பாரப்பாபுதன்திசையில் சனியன்புத்தி
பாழானமாதமது முப்பத்திரண்டு
சேரப்பாநாளதுவும் ஒன்பதாகும்
செலுத்துகிறபலனதுவை செப்பக்கேளு
வீரப்பாசத்துருவால் சூனியமுண்டாம்
விதமில்லாநோய்போலே விதங்கெடுபண்ணும்
மாரப்பாமனைவியரும் புத்திரரும்தானும்
மரணமாம்உன்னுடலு மரணமாமே. (௨௫௯)

கேதுமகாதிசை சுயபுத்தி.

ஆமென்றகேதுதிசை வருஷம்யேழு
அதினுடையபுத்திநாள் நூத்திநாற்பத்தியேழு
போமென்ற அதின்பலனை புகழக்கேளு
புகழான அரசர்படை ஆயுதத்தால்பீடை
தாமென்றசத்துருவால் வியாதிகாணும்
தனச்சேதம்உடல்சேதம் தானேஉண்டாம்
நாமென்றநகரத்தில் சூனியங்களுண்டாம்
நாடெல்லாம்தீதாகும் நன்மையில்லாப்பகையே (௨௬௰)

கேது திசை-சுக்கிரபுத்தி

பகையானகேதுதிசை சுக்கிரபுத்தி
பாங்கில்லாமாதமது பதினாலாகும்

தகையான அதின்பலனை சாற்றக்கேளு
தாழ்வில்லாசத்துருவால் விலங்குண்டாகும்
நகையானபூஷணங்கள் சிலவதாகும்
நாரிழையாள்தன்னுடனே அபமிருத்துகாணும்
வகையானராசாவால் மனமகிட்சியாகி
மனைவிமக்கள்தன்னுடனே வாழ்வன்காணே. (௨௬௧)

கேதுதிசை-சூரியபுத்தி.

பாரப்பாகேதுதிசை சூரியபுத்தி
பாங்கானநாளதுவும் நூத்திஇருபத்திஆறு
பாரப்பா அதின்பலனைச்சொல்லக்கேளு
ஆகாதசத்துருவால் அக்கினியும்பேயும்
சேரப்பாசேர்ந்துமே கூடிக்கொல்லும்
சேர்ந்துநின்றதந்தைகுரு மரணமாகும்
வீரப்பாவீண்சிலவு மிகவேயாகும்
வீடுவிட்டுகாஷாயம் பூணுவானே. (௨௬௨)

கேதுதிசை-சந்திரபுத்தி.

பூணுவான்கேதுதிசை சந்திரபுத்தி
புகழானமாதமது நாலுமூணும்
ஆணுவான் அதன்பலனை அரையக்கேளு
ஆயிழையாள்விலகிநிற்பள் அதமமாகும்
தோணுவான்தோகையரும் புத்திரரும்பாழாம்
தொகுதியுடன் பொருளதுவுஞ்சேதமாகும்
நாணுவான்நாரிகையும் சலத்தில்வீழ்ந்து
நன்றாகமடிந்திடுவாள் நலமில்லைதானே. (௨௬௩)

கேதுதிசை-செவ்வாய்புத்தி.

தானென்றகேதுதிசை செவ்வாய்புத்தி
தாழ்வானநாளதுவும் நூத்தியிருபத்தியேழு
வானென்ற அதின்பலனை வழுத்தக்கேளு
வண்மையுடன்யினசத்துரு தானேஉண்டாம்
கோனென்றகோளுநால் குடிகேடாகும்
கோதையரால்குலமதுவு நாசமாகும்
தேனென்றதிரவியமும் சேதமாகும்
தெகுட்டாததுணை தம்பிதீதுண்டாமே. (௨௬௪)

கேதுதிசை-ராகுபுத்தி.

உண்டானகேதுதிசை ராகுபுத்தி
உண்மையில்லாநாளதுவும் வருடம்ஒன்று
நன்றாகும்நாளதுவும் மூவாறாகும்
நலமில்லா அதின்பலனை நவிலக்கேளு
விண்டாகுஞ்சத்துருவால் சோரபயமாகும்
வினையானமனைவிதன்னால் வீண்கலகமாகும்
ஒன்றாகும்உன்உடம்பில் பிணியுண்டாகும்
உறுதியில்லாஉன்தெய்வம் வோடுந்தானே, (௨௩௫)

கேதுதிசை-குருபுத்தி.

காணவேகேதுதிசை வியாழபுத்தி
கனமானமாதமது பதினொன்றாகும்
தோணவேநாளதுவும் ஆறதாகும்
துகையானதனங்களும் புத்திரனாலுண்டாம்
பூணவேபூவுடையாள் நிர்த்தனம்செய்வாள்
பூமிதனில்வெகுலாபம் பொருந்திகாணும்
நாணவேராசாங்க யோகம்பெத்து
நன்றாகசகடையது யோகந்தானே. (௨௩௬)

கேதுதிசை-சனிபுத்தி.

தானென்றகேதுதிசை சனியன்புத்தி
தாழ்வானமாதமது பதிமூன்றாகும்
நானென்றநாளதுவும் ஒன்பதாகும்
நலமில்லா அதன்பலனை நவிலக்கேளு
வானென்றவான்பொருளும் கேடுவாகும்
வகையானமனைவியுடன் மக்களுமேபோகும்
மானென்றமதிமூன்றில் மரணமாவான்
மனக்கவலைரொம்பஉண்டு மாள்வான்பாரே. (௨௩௭)

கேதுதிசை-புதன்புத்தி.

பாரப்பாகேதுதிசை புதனார்புத்தி
பாங்குள்ளமாதமது பதினொன்றாகும்
சேரப்பாநாளதுவும் இருபத்தியேழு
சேதமில்லா அதன்பலனை செப்பக்கேளு
வீரப்பாகொண்டுநின்ற மயக்கம்போய்நீ
மேதினியில்நீயுமொரு மனுஷனாவாய்
சீரப்பாலட்சுமியும் சேர்ந்துகொள்வாள்
நீங்கில்லாமனக்கவலை யில்லைகாணே. (௨௩௮)

நல்லப்பா நமனாரைக் காண்பதற்கு
நானில்த்தைவிட்டிடுவன் எட்டோளெட்டில் (௨௮௰)

எட்டப்பா கடகத்திலுதித்தபாலன்
இனியகோள்பார்த்திருக்க பலனைக்கேளு
கட்டப்பாகனகமொடு தான்யம்சேர்ப்பன்
கடுநடையனவேசியின்மேல் கவனம்கொள்வன்
வட்டப்பாவாதமொடு சயித்தியம்காணும்
வளமில்லாசுகஜன்னி தரித்திரம்கொஞ்சம்
மூட்டப்பாமத்திபிலே நிலைத்துநின்றால்
முடிவானவயதுமது நூறுகூறே. (௨௮௧)

கூரப்பாசிங்கத்தின் பலனைக்கேளு
குருபானைதுதித்திடுவோன் புத்தியுள்ளோன்
வீரப்பாவெகுபேர்க்கு பிரியோனாகி
வேதாந்தசாஸ்திரமும் கேளவிகேட்பன்
சீரப்பாசெங்கரந்தி அம்மைகண்ணாய்
சீரிவரும்செம்பாம்பால் பயமும்சொல்லு
ஆரப்பாஉத்தமனார் கண்ணால்நோக்க
உள்ளவிதிதப்பாது உரைத்திட்டேனே. (௨௮௨)

உரைத்திட்டேன்கன்னினுட பலனைக்கேளு
உத்தமனும்ஆசாரம்புத்தியுள்ளோன்
கரைத்திட்டேன் கணக்கனும்கண்ணால்நோக்க
கனகமதுசிரிக்குமடா கையில்தானும்
குறைத்திட்டேன் தீயாலும்அம்மைபேதி
குற்றம்வந்துநிலைத்தானால் விதியும்தீர்க்கம்
உரைத்திட்டேன்போகருட கடாக்ஷத்தாலே
உள்ளபடிஎடுத்துரைத்தேன் உலகின்கண்ணே (௨௮௩)

கண்ணப்பாதுலையினுட பலனைக்கேளு
கனதனங்கள்உண்டாகும் இல்லால்ரண்டு
அன்னப்பாஅகம்காடி நிலமுமுள்ளோன்
அப்பனேஅசுரர்குரு சுபர்கள்நோக்க
திண்ணப்பாதீயாலும் அம்மைகாந்தல்
தெருவையுறல்நோயுண்டாம் ஜலத்தால்பீடை
பண்ணப்பாபாலனுமே எழுபத்தெட்டில்
பரலோகம்மடைவனடா பகர்ந்துசாற்றே. (௨௮௪

போமென்றபொன்முதலும் பூமியாண்டு
பொங்கமுடன்தானிநந்து அரசுஆள்வாய். (உஎசு)

சுக்கிரதிசை-கேதுபுத்தி.

ஆளலாம்சுக்கிரனில் கேதுபுத்தி
ஆகாதமாதமது யீரேழாகும்
வாழலாம்அதின்பலனை வகுத்துச்சொல்வேன்
வளர்கொடியாள்தான்சாவாள் வான்பொருளும்போகும்
தாழ்வானதன்னரசு ராச்சியங்கள்போகும்
சம்பத்துதான்குறையும் தந்தைதாய்மரணம்
கோளலாம்சத்துருவால் குடிகேடாகும்
கோதையரும்தான்போவாள் குடிகேடாமே. (உஎஎ

பனிரெண்டு லக்கினபலாபலன்.

பாரப்பாமேடத்தி லுதித்தபேர்க்கு
பாராளும்மன்னருல் லாபமுள்ளோன்
வீரப்பாவிஷபயமும் காந்தல்நோயும்
வேதாந்தசாஸ்த்திரமும் கேள்விகேட்ப்பன்
நீரப்பாநீர்பயமும் தீயால்வேந்தை.
நீநிலத்தில்மிருகவதை செய்வன்தானும்
கூரப்பாகுருநோக்க வயதுநூறு
கொற்றவனேகூறுகிறேன் இடபம்கேளே. (உஎஅ)

கேளப்பாகுளவிகளு மெத்தஉண்டு
கெதியுள்ளசிவனடியார்க் கன்பன்சத்தியன்
ஆளப்பா அகம்பொருளும் பெரியோர்நேசம்
அப்பனேகிட்டுமடா ஜென்மனுக்கு
கூரப்பாகௌ யாதி யாலும்பீடை
கொற்றவனே குளிர்சன்னிசிரங்குகண்ணோய்
சீரப்பாசென்மனுமே அருபத்தெட்டில்
செத்திரந்துமடிவனடா இடபம்சொல்லே. (உஎகூ)

கொல்லப்பாமிதுனத்தின் பலனைக்கேளு
சொற்றவரு ஞசாரன்கபடன்யூகி
தல்லப்பா தன்வேலைமுடிக்கும்வல்லன்
தக்கபடிசெய்திடுவன் பித்தரோகி
நில்லப்பாமருந்தாலும் சொரத்தாலும்பீடை
நீர்பயமும்ஜலரோகம் மிருமல்காந்தல்

(உசாஅ)

தேனென்றதெரிவையர்கள் விகற்பமாகும் (உஎஉ)
தீதானசத்துருவும் சேர்வான்பாரே.

சுக்கிரதிசை-ராகுபுத்தி.

பாரப்பாசுக்கிரதிசை ராகுபுத்தி
பகையானமாதமது மூப்பத்தாறும்
சேரப்பா அதின்பலனை செப்பக்கேளு
சிற்றோகம்காமாலை ஜெயமும்கோவாம்
ஆரப்பா அரசர்பகை அபமிருத்துமாமே
அன்பானதாய்தந்தை அடவுடனேசாவாம்
மேரப்பாமேகமதால் ரோகமுண்டாம் (உஎ௩)
மேலெல்லாம்சிரங்குகுஷ்டம் ஆவான்பாரே.

சுக்கிரதிசை-குருபுத்தி.

காணவேசுக்கிரதிசை வியாழபுத்தி
கனமானமாதமது முப்பத்திரண்டு
தோணவேஅதின்பலனைச்சொல்லக்கேளு
தோகையரும்மங்களமும் சுபயோகமாகும்
பேணவேபெருஞ்செல்வம் பெருகும்பாரு
பெரிதானபுத்திரனும் பெண்களுண்டாம்
நாணவேநாடுநகரம் உண்டாகும்பாரு (உஎச)
நன்மையுடன்வாகனமும் நட்புடனேஉண்டாம்.

சுக்கிரதிசை-சனிபுத்தி.

உண்டாகும்சுக்கிரதிசை சனியன்புத்தி
யுண்மையுள்ளமாதமது மூப்பத்தெட்டு
தெண்டாடும்தினபலனை சொல்லக்கேளு
திரவியமும்பூமிமுதல் சேரும்பாரு
நன்றாகும்அரசர்பதி யாவாய்பாரு
நன்மையுள்ளமாதர்மைந்தர் நாடுநகர்உண்டாம்
சென்றாகும்செல்வபதி யாவான்பாரு (உஎரு)
தீர்க்கமுள்ளமன்னனெனக் செப்பலாமே.

சுக்கிரதிசை-புதன்புத்தி.

ஆமென்றசுக்கிரதிசை புதனார்புத்தி
அன்புடையமாதமது முப்பத்தினலு
நாமென்றஅதின்பலனை நவிலக்கேளு
நாடுநகர்உன்வசமே ஆகும்பாரு
தானென்றதன்னரசு ஆண்டுநீயும்
தாரணியில்நீ[illegible]மொரு தவசியாவாய்

சுக்கிரமகாதிசை சுயபுத்தி.

காணவேசுக்கிரதிசை வருஷம்நாலேந்து
கனமானசுக்கிரனில் சுக்கிரன்புத்தி
பூணவேமாதமது நாற்பதாகும்
பூலோகமன்னரைப்போல் பூவிலரசாள்வான்
பேணவேசவுக்கியங்க ளுண்டாகும்பாரு
பெரிதானலெட்சுமியும் பொற்கொடிபோல்வருவாள்
தோணவேசோபனமும் சுபயோகமுண்டாம்
தோகையர்கள்வந்தவுடன் தொகுதியுடன்வாழ்வன். (உசு...

சுக்கிரதிசை-சூரியபுத்தி,

வாழலாம்சுக்கிரதிசை சூரியபுத்தி
வகையில்லாமாதமது பனிரெண்டாகும்
நாளலாம் அதின்பலனை நவிலக்கேளு
நன்மையில்லாசுரபீடை நாய்கடிகளுண்டாம்
கேளலாம்சத்துருவும் குடிகேடுசெய்வான்
குணமானதாய்தந்தை மரணமதுவாகும்
வாழலாம்சித்தமதில் வெகுகலக்கமுண்டாம்
மனைவிதனைவிட்டேகி மலையாண்டியாவான் (உஎய)

சுக்கிரதிசை-சந்திரபுத்தி.

ஆவானேசுக்கிரதிசை சந்திரபுத்தி
அருளில்லாமாதமது நாலேந்தாகும்
போவானேஅதின்பலனை புகழக்கேளு
பொன்பெறுவாள்அன்னையுமே மரணமாவாள்
சாவானேசம்பத்தும் குறைந்துபோகும்
சதிரானமனையைவிட்டு ஓடிப்போவான்
நோவானேவியாதியது தொடர்ந்துகொள்ளும்
நுணுக்கமுள்ளவினைசமயம் நுகருந்தானே. (உஎக)

சுக்கிரதிசை-செவ்வாய்புத்தி.

தானென்றசுக்கிரதிசை செவ்வாய்புத்தி
தாழ்வானமாதமது பதினொலாகும்
யேனென்றஅதின்பலனை யியம்பக்கேளு
எலிகடியும்பீனிசமும் இளைப்புமுண்டாம்
வானென்றவயத்தினிலே நோவுண்டாகும்
வகையுடனேஆசனத்தில் கடுப்புண்டாகும்

ய

சாற்றப்பாதேளினுட பலனைக்கேளு
சாதுரியன்மனைவியிடப்பிரியன்சத்தியன்
கூற்றப்பாகோதையருல்பொருளும்சேரும்
கொற்றவனேகுரித்தபடி முடிக்கும்வல்லன்
காற்றப்பாஜலத்தாலும் கனலிபீடை
கண்டத்தில்நோய்வந்து பிணியும்தீரும்
ஆற்றப்பாஅயன்விதியும் நூறுக்குள்ளே
அப்பனேஅரன்பதவி அடைவன்தானே (உஅரு)

தானென்றதனூர்தனிலுதித்த செல்வன்
தரணிதனில்பேர்விளங்கும் தனமுமுள்ளோன்
கோனென்றகுமரியினால் லாபமுண்டு
கொற்றவனேசத்துருவை அறிந்துவாழ்வன்
ஏனென்றஇளவயதில் கஷ்டமுண்டு
இடர்வந்துதீருமடா நேத்திரரோகம்
சீனென்றஜீவன்விடும்காலமப்பா
சிவசிவாஎழுபதுக்குள் சிந்தித்தேனே. (உஅசு)

சிந்தித்தேன்மகரத்தில் ஜெனித்தஜென்மன்
சிவசிவாகாணுதவிடத்தில் மச்சம்
சிந்தித்தேன்சிவந்தமெய்யுடையன் கோபி
செம்பாம்புதீயாலும் பயமும்சொல்லு
சிந்தித்தேன்ஜென்மனவன் பச்சிவதை
செய்திடுவன் மனையாளுக்கினியனவன்
சிந்தித்தேன்சிரங்கிருமல் ஜுரமும்வாந்தி
சிவசிவா அருபதுக்குள் செப்புவாயே. (உஅ

செப்புவாய்கும்பத்தில் ஜெனித்தகாளை
சிவசிவா புகழ்ந்திடுவன் தன்னைத்தானே
ஒப்புவாய்உலகத்தோர் பழிக்குமாந்தர்
உள்ளபடிஉரைத்துவிட்டேன்யர்ப்பவித்தை
தப்புவாய்தன்மனைவிக்கினியோனுகி
தரணிதணிலுள்ளோர்செய்நன்றி மரந்துவாழ்வன்
இப்புவியில்எரிஜன்னி சுரமும்வாதம்
எண்பதுக்குள்நிரையாணம் எடுத்துமூட்டே. (உ

மூட்டப்பாமீனமதிலுதித்தபேர்க்கு
மேதினியில்சூரனடா மூர்க்கதியோன்
ஆட்டப்பாஅழகான மெய்யன்ஞானி
அப்பனேஇந்தா மரித்துசெப்பு

கூட்டப்பாகாது நோய்சுரமும்வாதம்
 கொற்றவனேகுளவியுமேதப்பினின்றால்
ஊட்டப்பாபோகருட கடாட்சத்தாலே
 உத்தமனே நூறுண்டேஉரைவன்தானே. (உஅகூ

௰உ-ராசிகளில்-சந்திரன் நின்றபலன்.

தானென்றமேடமதில் சசிதாநிற்க்கில்
 தனம்தேடிசிலவழிப்பன் சிவந்தகண்ணன்
ஊனென்றஉதையாதி பெரியோர்காண
 உத்தமனேஉரநடையான்பெலமுமுள்ளோன்
போனென்றகோதையர்மேல் விருப்பம்கொள்வன்
 கொற்றவனேமருஉள்ளோன் ஜலத்தால்கண்டம்
மானென்றபோகருட கடாக்ஷததாலே
 மைந்தனேபுலிப்பாணி அறைந்திட்டேனே. (உகூ

அறைந்திட்டேன் இடபத்தில் சசிதாநிற்க
 அளகனடாபசிபொறுக்கான் முகத்தில்மச்சம்
பறைந்திட்டேன்புத்திரர்கள் மெத்தஉண்டு
 பாக்கியமும்வீரியமும் வேசிமோகன்
சிறைந்திட்டேன்ஜென்மனுக்கு மத்தியில்கஷ்டம்
 திடமாகசெப்பிடுவாய் ஜெகத்திலோர்க்கு
உரைத்திட்டேன்போகருட கடாட்சத்தாலே
 கொற்றவனேபுலிப்பாணி குறித்திட்டேனே (உகூ

குறித்திட்டேன்மிதுனமதில் சசிதாநிற்க
 கோதையர்கள்கொண்டாடும் சிவந்தகண்ணன்
சிரித்திட்டேன்சென்மனுக்கு சுருண்டரோமம்
 சிவசிவாநாசியது சிறுத்திருக்கும்
பிரித்திட்டேன்போஜனத்தில் பிரியோனவன்
 பெரும்பித்தம்சிரங்கிருமல் பிளவைகாணும்
எரித்திட்டேன்போகருட கடாட்சத்தாலே
 இனியகோள்பார்த்திருக்க இடர்களில்லே.

இல்லப்பாகடகத்தில் சசிதாநிற்கில்
 ஏந்திழையாள்நகைபுரிந்து இதமாய்வாழ்வன்
வல்லப்பாவளவுகளும் மெத்தைகட்டி
 வன்மையுள்ளபெரியோனுக்கன்பனவன்
...ாப்பாகண்டமது பெருத்திருக்கும்
 ...ணம்தேடிபுதைத்திடுவன் கபடன்யூகி

அள்ளப்பா அத்தலத்தோன் மறைந்தானாகில்
 அப்பலனை அறையாதே அறிவித்தேனே (உகூ)
அறிவித்தேன் அரிதனிலே சசிதாநிற்கில்
 ஆங்காரகொடியனவன் மூர்க்கன்கோபி
அறிவித்தேன்காடுமலைவாசம்செய்வன்
 அப்பனே அவன்பிதா லெச்சைபண்ணான்
அறிவித்தேன்பாக்கியமும் கொஞ்சமுண்டு
 அரசனதுபகைகடனும் வந்துசேரும்
அறிவித்தேன்போகருட கடாக்ஷத்தாலே
 அப்பனே அருக்கநிலை அறிந்துகூறே.

கூறப்பாகன்னிதனில் சசிதாநிற்கில்
 குற்றமில்லைசத்தியவான் சங்கீதபிரியன்
வீரப்பாவித்தைபுத்தி திரவியமுள்ளோனவன்
 விளங்குகின்றதேகமது இளைத்துகாணும்
பாரப்பாபெரியோரால்பதமும்பெற்று
 பலசிந்தையுடையவனும் பாரில்வாசன்
சீரப்பாபோகருட கடாக்ஷத்தாலே
 சிறப்பாகபுலிப்பாணி செப்பக்காணே, (உகூரு,

காணப்பாதுலையதனில் இந்துநிற்கில்
 கனபுத்தியுள்ளவனும் அங்கயீனம்
ஊணப்பாவுரைத்துமேசெட்டுசெய்வன்
 உத்தமனேரோகியாம் கபடன்யூகி
சீனப்பாசுகவானும் பெரியோர்க்கன்பன்
 சித்தமதில்சந்தோஷமில்லைதானும்
தானப்பாபோகருட கடாட்சத்தாலே
 தரணிதனில்வீற்றிருப்பன் தயவாய்பாரே. (உகூசு

பாடினேனின்னமொன்று பகரக்கேளு
 பகலவனுஞ்சனிசெவ்வாய் கொடியோராவர்
தேடினேன்யெட்டாறு பன்னிரெண்டும்
 திடமானகேந்திரமும் வலுமையப்பா
நாடினேன்நல்லோர்கள் கோணம்நட்பு
 நற்பொருளுங்கீர்த்தியுண்டு நலமாய்வாழ்வன்
ஆடினேன் அயன்விதியும் தீர்க்கம்தீர்க்கம்
 அப்பனேபுலிப்பாணி அறைந்திட்டேனே. (

பாரப்பாயின்னமொரு புதுமைகேளு
பாங்கானமலைதனிலே சப்தகோள்கள்
சேரப்பாஜென்மனிடம் பெரியக்காள்தான்
சிறப்பாகவீற்றிருப்பாள் கிரகந்தன்னில்
கூரப்பாகுண்டிதுணி கந்தையாகும்
குவலயத்திலிவனைப்போல் தரித்திரனில்லை
ஆரப்பாயென்னைப்போல் சொன்னாரில்லை
அப்பனேயின்னமொரு புதுமைகேளு.

[illegible]மென்றநவக்கிரகந் திசைபுத்திபலனை
அணு அணுவாய்சொல்லிவிட்டோம் அனுசரித்துப்
[illegible]மென்றநவக்கிரகந் திசைகள்புத்தி
நன்றானபலனிதிலே நவின்றுவிட்டோம்
[illegible]மென்றகிரகமது ஆச்சியுச்சம்
தப்பாதநட்புநிலை சத்துருநீசம்
[illegible]பாமென்றபகைச்சாரம் பார்த்துநீயும்
பொருளதுபோல்பயனறிந்து புகலுவாயே.

இடமறிந்துறைத்தல்.

கேளப்பாராசிபனி ரெண்டுக்குள்ளே
கனமுள்ளகோள்கள்நிலை யறியாமல்தான்
[illegible]பாளப்பாபலவாராய் சக்கரம்பூட்டி
பணம்பறிக்கவித்தையது பாரிலேதான்
சூளப்பாசோதிடமும் முன்னூறுக்குள்
சுகமாகபாடிவைத்தேன் நுணுக்கமாக
நீளப்பாபோகருட கடாட்சத்தாலே
நீனிலத்தில்புலிப்பாணி நிகழ்த்தினேனே.

காணப்பாகுருபதியின் நிலமைபாரு
கனமுள்ளஇராமனின்ற நிலையைப்பாரு
வீணப்பாலெக்கினேசன் நிலையைப்பாரு
விதமானஜென்மனுட திசையைப்பார்த்து
ஊணப்பாஉன்மனதை திடப்படுத்தி
உத்தமனேஊழ்வினையை யெடுத்துச்செப்பு
ஆளப்பாபோகருட கடாட்சத்தாலே
அப்பனேபுலிப்பாணி முன்னூறுமுற்றே.

புலிப்பாணிசோதிடம்-௩௱
முற்றிற்று.